மலர்-5 இதழ்-123 அக்டோபர் 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்




# ஊமையை பேச வைத்த ஸ்ரீ உத்தமராய பெருமாள்

www.aanmeegamalar.com

# திருவண்ணாமலை பவழக்குன்று ரகசியம்





கிரிவலப்பாதையில் கடைசி லிங்கமான ஈசான்ய லிங்கத்தை தரிசித்து விட்டு வரும் வழியில் சின்னக்கடைத் தெருவில் ஒரு சிறிய வீதியின் வழியே சென்று சுமார் 200 படிக்கட்டுகள் ஏறினால் பவழக்குன்று உள்ளது.

கோவிலின் உட்பகுதியில் சிறிய அறை அதில் படுத்தவாறு தான் உள்நுழைய முடியும். இங்கு ரமணமஹரிஷி தியானம் செய்துள்ளார்.

பவழக்குன்றின் மேல் இருந்து பார்த்தால் திருவண்ணாமலை கோவில் அமைப்பும் தீபம் ஏற்றுவதையும் தெளிவாகக் காணமுடியும். பவழக்குன்றின் மிக முக்கிய சிறப்பம்சங்கள்: அன்னை பார்வதி தவம் புரிந்து அருணாச்ச லேஸ்வரருடன் ஐக்கியமானதும், கௌதமர், ரமணமஹரிஷி மற்றும் பல மஹரிஷிகளும் வசித்த புனிதமான இடம் இப்பவழக்குன்று. இங்கு தான் ரமண மஹரிஷிகள் தனது முதல் உபதேசத்தை

"அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கான வன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பான், என்றும் நடவாதது என் முயற்சிக் கினும் நடவாது; நடப்பது என் தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆதலின் மௌனமாய் இருக்கை நன்று"

அன்னை அழகம்மையாருக்கு 1899–ஆம் ஆண்டில் அருளியதாக பதிவுகள் தெரிவிக் கின்றன.

# மூன்று வடிவம் மூன்று பலன்கள்



ஆதிசங்கரர் வகுத்த ஷண்மத வழிபாட்டு முறைகளில் "காணா பத்தியம்' எனப்படும் கணபதி வழிபாடே முதன்மை வகிக்கின்றது. விநாயகர் தோன்றிய வரலாற்றினையும், நரமுக கணபதியான அவர் கஜமுக கணபதியான வரலாற்றினையும் புராணங்கள் பல்வேறுவித மாக விவரிக்கின்றன. சுருங்கக்கூறின், அற்புதங்கள் பல நிறைந்தது.

அவரது அவதாரம். ஆதியிலும் அந்தத்திலும் விளங்கியதால் ஆதியந்தமற்ற பரபிரம்ஹ ஸ்வரூபமாக இவரை, "ஜ்யேஷ்டராஜன்' (மூத்தவர்) என்று வேதங்கள் அழைக்கின்றன. கணங்களுக்கெல்லாம் தலைவரானதால் கணபதி எனவும் மேலான தலைவர் என்பதால் விநாயகர் எனவும், தடைகளை நீக்குவதால் விக்னேஸ்வரர் எனவும் பல பெயர்கள் உடையவரானார்.



# நைவேத்தியத்தின் சிறப்புகளும்

# வித்தியாசமான நைவேத்தியத்தை படைக்கும் கோவில்களும்

இறைவழிபாட்டில் நைவேத்தியம் என்பது முக்கிய நிகழ்வாகும், அதுவும் சாஸ்திரப்படி நைவேத்தியம் செய்வது என்பது இன்று பெரும்பாலான ஆலயங்களில் பின்பற்றுவதே கிடையாது.

மூலவர் விக்கிரகத்தின் அளவிற்கும், பிரகார தெய்வங்களின் எண்ணிக்கைக்கும் ஏற்ப சாஸ்திரத்தில் ஒரு கணக்கீடே உள்ளது. அந்த கணக்கீட்டின்படி, மூலவர் அகலம், உயத்துக்கு ஏற்ப சரியான அளவு நைவேத்தியம் தயாரித்து இறைவனுக்கு சமர்ப்பித்து வந்தால், அந்த ஆலயம் உயிரோட்டமாக இருக்கும் என்பது சாஸ்திரம்.

இந்த நைவேத்தியம் என்பது இறைவனுக்கு படைக்கும்போது அதில் ஒருசில பகுதிகள் அக்கோவிலை பாதுகாக்கும் பூத கணங்களுக்கும், இறைவனிடம் வேண்டுதலை கொண்டு சேர்க்கும் தேவதைகளுக்கும் உணவாக மாறும்.

ஆனால் தற்போது தமிழகத்தில் பெரும் பாலான கோவில்களில் கடமைக்கென்று ஏதோ ஒன்றை, சாஸ்திர கணக்கீடு இல்லாமல் நைவேத்தியம் படைக்கப்படுவதால், கோவில்களில் உள்ள தேவதைகள் முதற்கொண்டு பூதகணங்கள் வரை செயல்படமுடியாத நிலைக்கு தள்ளப் படுவதால் கோவில்களின் முழு மகிமை வெளி வருவதில்லை.

இந்த நைவேத்தியம் படைப்பிற்கென்றே ஒரு குறிப்பிட்ட பகுதி சாஸ்திர சம்பிரதாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதை விரிவாக பிறகு பார்ப்போம். தற்போது எந்த கோவில்களில் எந்த உணவினை நைவேத்தியமாக படைக்கின்றனர் என்பதை பார்ப்போம்.

- சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கு கிச்சடி சம்பா சாதம் நைவேத்தியம் படைக்கப்படுகிறது.
- ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயத்தில் ரங்கநாதருக்கு தேங்காய்த் துருவலும் துலுக்க நாச்சி யாருக்கு ரொட்டி, வெண்ணெய், கீரையும் நைவேத்தியம் படைக்கப்படுகிறது. தினமும் இரவில் அரவணை பிரசாதமும் உண்டு.
- திருவாரூர் தியாகராஜப் பெருமானுக்கு

நெய்யில் பொறிக்கப்பட்ட முறுக்கு தினசரி பிரசாதம்.

❖ திருக்கண்ணபுரம் சௌரிராஜப்பெருமாளுக்கு தினமும் இரவில் முனியோதரயன் பொங்கல் எனும் அமுது செய்விக்கப் படுகிறது.

❖ காஞ்சிபுரம்வரதராஜப் பெருமாளுக்கு சுக்கு, மிளகு, கறிவேப்பிலை மணத்துடன் கூடிய காஞ்சிபுரம் இட்லிதான் முதல் நைவேத்யம்.

❖ திருப்பதி வெங்கடாஜலபதிக்கு விதவிதமான பிரசாதங்கள் செய்யப்பட்டாலும் குலசேகரன் படியைத் தாண்டி மண் சட்டியில் நிவேதிக்கப் படுவது தயிர்சாதம் மட்டுமே.

❖ திருப்பெருந்துறை எனும் ஆவுடையார்கோயிலில்ஆத்மநாதருக்கு புழுங்கலரிசிச் சோறும் பாகற்காய் கறியுமே பிரசாதம்.

❖ கேரள மாநிலம் கொட்டாரக்கராவில் விநாயகப் பெருமானுக்கு சுடச்சுட நெய்யப்பம் செய்து நிவேதித்துக் கொண்டே இருக்கின்றனர். உதயம் முதல் அஸ்தமனம் வரை அப்பம் ஏற்கும் கணபதி இவர்.

❖ ஸ்ரீமுஷ்ணம் பூவராக மூர்த்திக்கு தினமும் அபிஷேகத்திற்குப் பிறகு முக்தாபி சூரணம் எனும் மகா பிரசாதம் நிவேதனம் செய்யப்படுகிறது. இந்த பிரசாதம் நோய்களை தீர்க்கும் மருந்தாகக் கருதப்படுகிறது.

❖ கேரளம், திருவிழா மகாதேவர் ஆலயத்தில் மூலிகைகளைச் சாறு பிழிந்து பாலுடன் கலந்து ஈசனுக்கு நிவேதனம் செய்து பின் பக்தர்களுக்குப் பிரசாதமாக அளிக்கின்றனர். இந்த பால் வயிற்றுக் கோளாறுகளைத் தீர்க்கிறது.

❖ நவகிரக, சுக்கிர தலமான கஞ்சனூரில் அன்னாபிஷேகத்தின் போது சுரைக்காய் பிரசாதம் படைக்கப்படுகிறது.

❖ மதுரை மீனாட்சியம்மன்ஆலயத்தில் காலையில் ஞானப்பால் பிரசாதமும் இரவில் பள்ளியறையின் போது கமகமக்கும் சுண்டலும் பாலும் நிவேதனம் செய்யப்படுகின்றன.

❖ கொல்லூர் மூகாம்பிகைக்கு இரவு அர்த்த ஜாம பூஜையின் போது சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், லவங்கம், சர்க்கரை சேர்த்து தயாரிக்கப்படும் மண மிக்க கஷாயம் பிரசாதமாகத் தரப்படுகிறது.



❖ நெல்லையில் உள்ள புட்டாத்தி அம்மன் ஆலயத்தில் அரிசி, வெல்லம், ஏலக்காய் சேர்த்துத் தயாரிக்கப்படும் புட்டு பிரசாதம்.

❖ கேரளம், குருவாயூரில் குருவாயூரப்பனுக்கு சுண்டக்காய்ச்சிய பால் பாயசம் பிரசாதமாக படைக்கப்படுகிறது.

❖ திருச்சியில் கோயிலடி அப்பக்குடத்தானுக்கு தினமும் அப்பம் நிவேதனம் செய்யப்படுகிறது.

❖ கேரளம், இரிஞ்சாலக்குடாவில் பரதன் ஆலயத்தில், கத்தரிக்காயால் தயாரிக்கப் பட்ட வழுதனங்கா எனும் நைவேத்தியம் செய்யப்படுகிறது. செம்பைவைத்யநாத பாகவதர் இந்தப் பிரசாதம் உண்டு தன் வயிற்று நோய் தீர்ந்ததாக எழுதிய கடிதம் ஆலயத்தில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

❖ குற்றாலம் குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மைக்கும் நாள்தோறும் சுக்கு, மிளகு சேர்த்த கஷாயம் படைக் கப்படுகிறது. அருவியால், அவருக்கு தலைவலியும் ஜலதோஷமும் வராமல் இருக்க இந்த ஐதீகம்.

❖ முழு உளுந்தை ஊறவைத்து பச்சரிசி மாவுடன் மிளகு, சீரகம் சேர்த்து நெய் ஊற்றித் தயாரிக்கப்படும் தோசை, மதுரை அழகர் கோயிலின் பிரதான பிரசாதம்.

❖ திருநெல்வேலி பூமாதேவி அம்மன் ஆலயத்தில் தமிழ் மாதக் கடைசி வெள்ளி யன்று கூட்டாஞ் சோறும் சர்க்கரைப் பொங்கலும் நிவேதனம் செய்வர். துவரம் பருப்பு, அரிசி, காய்கறிகள் எல்லாம் சேர்த்து தேங்காய் அரைத்து விட்டு தயாரிக்கப்படுவது தான் கூட்டாஞ் சோறு.



புனிதவேல்

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

# 75 குறிப்புகள்
# நவராத்திரி சிறப்புகள்

அம்மனுக்கு உகந்த விழாவாக இந்தியா முழுவதும் கொண்டாடப்படுவது நவராத்திரி. இந்த நவராத்திரி விழா பற்றிய சிறு குறிப்புகளைப் பார்ப்போம்.

❖ சோழர் காலத்தில் நவராத்திரி திருவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது.

❖ தமிழ்நாட்டில் நவராத்திரி விழா, நாயக்கர் காலம் முதல் மக்கள் கொண்டாடும் 9 நாள் திருவிழாவாக மாறியது.

❖ நவராத்திரி காலத்தில்தான் மக்களிடம்வரி வசூலிக்கும் நடைமுறையை விஜய நகர மன்னர்கள் ஏற்படுத்தினார்கள்.

❖ நவராத்திரி விழாவை பெரிய அசுரர்கள் மட்டுமே கொண்டாட உரிமை இருந்தது. ராமநாதபுரம் சேதுபதி மன்னருக்கு முதன் முதலாக நவராத்திரி கொண்டாடும் உரிமையை திருமலை நாயக்கர் வழங்கினார். இதுவே தமிழகத்தில் நவராத்திரி விழா பரவ வழி வகுத்தது.

❖ நவராத்திரி விழா பற்றி தேவி புராணத்தில் மிக விளக்கமாக கூறப்பட்டுள்ளது.

❖ நவராத்திரி நாட்களில் பெண்கள் கன்யா பூஜை செய்வதால் சகல செல்வங்களையும் பெறலாம்.

❖ விஜயதசமி தினத்தன்று பெருமாள் கோவில்களில் வன்னி மரக்கிளையை வைத்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்து பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும்.

❖ நவராத்திரி பண்டிகையை முதன் முதலில் ராமர்தான் கொண்டாடியதாக புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ நவராத்திரி நாட்களில் இரவு 7 மணி முதல் 9.30 மணி வரை தேவி வழிபாடு செய்ய உகந்த நேரமாகும்.

❖ ஈசனம், அம்மையும் ஒன்று சேர்ந்து ஊஞ்சலில் ஆடுகின்ற தரிசனத்தை 9 நாட்களும் கண்டால் நவராத்திரி பூஜை செய்த பலன் கிடைக்கும்.

❖ நவராத்திரி நாளில் வரும் சப்தமிதிதியன்று வழிபட்டால் ஸ்ரீஹயக்ரிவப் பெருமாளின் அருளைப் பெறலாம். அன்று ஸ்ரீலலிதா சகரஸ்ர நாமத்தையும் நவாக்சரி மந்திரத்தையும் ஓதுவது கூடுதல் பலன்களைத் தரும்.

❖ பிரம்ம நவராத்திரி, கிருஷ்ண நவராத்திரி, ரிஷி நவராத்திரி, தேவ நவராத்திரி, பஞ்சகல்ப நவராத்திரி, பாக்ய நவராத்திரி, போக நவராத்திரி, தாத்பர்ய நவராத்திரி, சற்குரு நவராத்திரி, தேவதா நவராத்திரி என்று பல வகை நவராத்திரிகள் உள்ளன.

❖ பங்குனி மாதம் அமாவாசைக்குப் பிறகு பிரதமையில் தொடங்கும் லலிதா நவராத்திரி, மாசி மாதம் வரும் ராஜ மாதங்கி நவராத்திரி ஆடியில் வரும் மகாவராகி நவராத்திரி, புரட்டாசியில் வரும் சாரதா நவராத்திரி ஆகிய 4 நவராத்திரிகளையும் பெண்கள் கடைபிடித்தால் அம்பிகையின் அருளை பரிபூரணமாகப் பெறலாம்.

❖ அனைத்திலும் தேவியே உள்ளாள் என்பதை உலகுக்கு உணர்த்தவே நவராத்திரி நாட்களில் கொலு வைக்கப்படுகிறது.

❖ எல்லாரும் புரட்டாசி நவராத்திரியில்

மட்டுமே கொலுவைக்கிறார்கள்.ஆனால் 4 நவராத்திரி நாட்களிலும் கொலு வைத்தால் தான் அம்பிகை அருள் கிடைக்கும்.

❖ வீட்டில் கொலு வைத்தால், அம்பிகை அனைத்து அம்சமாக நம் வீட்டில் எழுந்தருளி விட்டாள் என்பது நம்பிக்கையாகும்.

❖ ஒரு நவராத்திரிக்கு கொலு வைத்தால் பிறகு வாழ்நாள் முழுவதும் நவராத்திரி நாட்களில் கொலு வைக்க வேண்டும் என்கிறார்கள்.

❖ நவராத்திரி பூஜையை அஸ்தம், சித்திரை அல்லது மூலம் நட்சத்திர நாட்களில் தொடங்குவது நல்லது. இந்த நாட்களில் வைதிருதி யோக நேரம் இருந்தால் மிகவும் நல்லது.

❖ புரட்டாசி மாதத்தை எமனின் கோரை பல் என்று அக்னி புராணம் சொல்கிறது. இந்த மாதம் எமனின் பாதிப்பில் இருந்து தப்பவே நவராத்திரி விழாவாக கொண் டாடப்படுகிறது.

❖ நவராத்திரி பூஜைகள் அனைத்தையும் செய்து சுகன்யா தேவி என்பவள் எல்லா வித பலன்களையும் பெற்றாள்.

❖ விஜய தசமி தினத்தன்று ஸ்ரீஆயுர் தேவியை போற்றி வழிபட வேண்டும். இதுதான்நவராத் திரி பூஜையின் நிறைவான பூஜையாகும்.

❖ நவராத்திரி நாட்களில் பகலில் சிவ பூஜையும் இரவில் அம்பிகை பூஜையும் செய்வதே சரியான வழிபாடாகும்.

❖ நவராத்திரி 9 நாட்களும் தினமும் பகலில் 1008 சிவ நாமாவளிகளை ஜெபித்து வழிபாட்டால் அளவிடற்கரிய பலன்கள் கிடைக்கும்.

❖ நவராத்திரி வழிபாட்டை தினமும் தொடங் கும் போது ஸ்யவன மகரிஷியையும் சுகன் யா தேவியையும் தியானித்தபடியே தினசரி பூஜையை தொடங்க வேண்டும்.

❖ நவராத்திரி நாட்களில் சுண்ணாம்பு மாவி னால் கோலம் போடக்கூடாது. அரிசி மாவைப் பயன்படுத்திதான் கோலமிட வேண்டும். அவ்வாறு செய்வதால் குடும்ப ஒற்றுமையும், செல்வமும் வளரும். சுண் ணாம்பு மாவு பயன்படுத்தினாலோ, எதிர் மறையான விளைவுகளே உருவாகும்.

❖ ஒன்பது நாட்களிலும் தேவியாக பாவித்துத் துதிக்க, நமக்குச் சொந்தமல்லாத, பிறர் வீட்டுக் குழந்தையையே அழைத்து வந்து உபசரிக்க வேண்டும். நம் வீட்டு அல்லது நம் உறவினர்களின் குழந்தைகளையே தேர்ந்தெடுப்பது கூடாது.

❖ தினந்தோறும் நவராத்திரி பூஜையின் நிறை வாக, பலவிதமான மங்கலப் பொருட்களை (மஞ்சள், குங்குமம், வளையல், ரிப்பன் போன்றவை) ஏழைகளுக்கு தானமாக அளிக்க வேண்டும்.

❖ தனித்து தானம் செய்வதை விட, சத்சங்க மாகப் பலரும் ஒன்று சேர்ந்து, மங்கலப் பொருட்களை மிகப் பெரிய அளவில் தானமாக அளிப்பதே சிறப்பானது.

❖ தான தர்மங்கள்தான் நவராத்திரி பூஜை களை நிறைவு செய்ய உதவிகின்றன. ஆகவே நவராத்திரியில் தானமளிப்பதே மிகமிக முக்கியம்.

❖ தென்னகத்தில் இருந்துதான் நவராத்திரிக் குரிய மகிஷாசுரமர்த்தினியின் கதை வங்க நாடு சென்றது.

❖ அந்த காலத்தில் நாடு சீரும் சிறப்பும் அடை யவும், செங்கோல் நடக்கவும், செல்வம் கொழிக்கவும் நவராத்திரி விழாவை மக்கள் கொண்டாடினார்கள்.

❖ நவராத்திரி ஒன்பது நாட்களிலும் நாராயண சுக்தம், புருஷசுக்தம், சகஸ்ரநாமம், சுதர்சன மந்திரம், கருடமந்திரம் முதலியவை ஜப ரூபமாக முழங்கும்.

❖ கன்னிப் பெண்களுக்குப் புதிய ஆடை



முதலியவை பரிசாக அளிக்கப்படவேண்டும் என்பது நவராத்திரி விழாவின் முக்கிய அம்சமாகும்.

❖ நவராத்திரி ஒன்பது நாளும் பூஜையைத் திருமகளே ஏற்றுக் கொள்கிறாள்.

❖ சரஸ்வதி பூஜை என்ன கிழமையானாலும் கடலை சுண்டல் எதுவும் செய்ய முடியாத வர்கள் பழங்கள் கொடுக்கலாம்.

❖ நவதானியச் சுண்டல் நவக்கிரக நாயகர் களைத் திருப்திப்படுத்தும். கோள்களால் வரக்கூடிய துன்பங்களைத் தடுக்கும்.

❖ ஷோடச லஷ்மி பூஜை நவராத்திரி வெள்ளிக் கிழமையில் செய்தால் ஐஸ்வர்யம் பெருகும். இது கிரியா சக்தி வழிபாடு.

❖ நவராத்திரி காலத்தில் முடிந்தவரை பாரா யணம் செய்வது தேவிக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தரும்.

❖ அந்த நாளில் கொலுவுக்கு வரும் கன்னி யரின் நடையுடை, பாவனை, பேச்சு, பாட்டு, நடந்து கொள்ளும் விதம் இவற்றை முனிவர்கள் தீர்மானித்து தன் மகனுக்கோ, தன் உறவினர் மைந்தனுக்கோ இவள் ஏற்ற வள் என்று தீர்மானிப்பர். பல திருமணங்கள் அப்படி முடிவாகி கார்த்திகை அல்லது தையில் நடந்திருக்கின்றன.

❖ குழந்தைகள் பொம்மைகளைப் பார்த்துக் கதை கேட்டால் பொறுமையாக சொல்ல முதலில் நீங்கள் அதை அறிந்து வைத் திருங்கள்! குழந்தைகளின் அறிவையும், பக்தியையும், திறமையையும் கொலு வளர்க்கும்.

❖ கொலு வைப்பதால் பெண்க ளின் மன இறுக்கம் தளர்ந்து லேசாகிறது.

❖ டெல்லியிலும், காசிக்கு அரு கிலுள்ள ராம் நகர் உத்தரபிரதேசம் போன்ற இடங்களிலும் ‘ராம்லீலா’ நடத்த பெரிய, தனியான திடல்களே உள் ளன. ஸ்ரீராமனது காவியத்தை பத்து அல்லது முப்பது நாட்கள் நாடகமாக நடிக்கின்றனர்.

❖ சிறுதுளசிக்கன்றைகளிமண்ணோடு கொண்டு வந்து கொலுவில் வைத்து தீபாராதனை காட்டுவது ஆனந்தத்தை அதிகப்படுத்தும்.

❖ நவராத்திரி கடைசி நாளன்று துர்க்கை இமயமலைக்கு திரும் பிச் செல்வதாக ஐதீகம் இருப்பதால் வட மாநிலங்களில் துர்க்கை சிலைகளை கங்கையில் போட்டு விடுவார்கள்.

❖ நவராத்திரி பூஜையின் போது எருமை மாடு களை பலி கொடுக்கும் வழக்கம் மேற்கு வங்கத்தில் இருந்தது. தற்போது அந்த பழக்கம் ஒழிக்கப்பட்டு விட்டது.

❖ நவராத்திரி விரதம் இருப் பவர்கள் தரையில் தான் படுத்து தூங்க வேண்டும்.

❖ அம்பிகை சங்கீதப் பிரியை. எனவே நவராத்திரி நாட்களில் தினமும் ஏதாவது ஒரு பாட்டாவது பாட வேண்டும்.

❖ வடநாட்டில் ஒரு பிரிவினர் நவராத்திரி 9 நாட்களும் உணவு சாப்பிடாமல் விரதம் இருப்பதுண்டு.

❖ தமிழ்நாட்டில் நவராத்திரி கொலு வைக்கப் படுவது போல ஜப்பானிலும் பொம்மை கொலு வைக்கிறார்கள். நம்மூர் சரசுவதி போல அங்கு பெண்டென் என்ற தேவதையை வணங்குகிறார்கள். அந்த தேவதையும் சரசுவதி வைத்திருப்பது போல கையில் புத்தகம் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

❖ சந்திரகுப்தர் ஆட்சிக் காலத்தில் நவராத்திரி விழா ஒரு வீர விழாவாகக் கொண்டாடப் பட்டது.

❖ அக்பர் காலத்தில் தசரா திருவிழா கோலாகல நிலைக்கு மாறியது.

❖ காளியை மேற்கு வங்க மக் கள் மிகவும் ஆத்மார்த்தமாக வழிபடுவதால் அம்மாநில மக்கள் சக்தி வணக்கக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

❖ குஜராத்தில் நவராத்திரி 9 நாட் களும் பெண்கள் கும்மியடித்து நடனமாடுவார்கள். இந்தநடனத் துக்கு கரவோ என்று பெயர்.

❖ நவராத்திரி 9 நாட்களும் மகா சக்தியை ஐதீகப்படி வணங்கினால் முக்திப் பேறு உண்டாகும்.

❖ நவராத்திரி கோலத்தை செம் மண் கலந்து போட்டால் அம்பாள் மன மகிழ்ந்து வருவார்.

❖ நவராத்திரி 9 நாட்களும் வாச லில் மாவிலை கட்டி பூஜை செய்தால் ஐஸ்வர்யம் உண்டாகும்.

❖ கொலு வைத்திருப்பவர்கள் அதன் முன் நவக் கிரக கோலம் போட்டால்



அம்பாள் அனுக்கிரகமும், நவக்கிரகப் பலன்களும் கிடைக்கும்.

- ❖ நவராத்திரி 9நாட்களும் வீட்டுக்குவரும் சுமங்கலி பெண்களுக்கு பரிசுப் பொருட்க ளுடன் பூந்தொட்டி, புத்தகத்தை தானமாக கொடுக்கும் பழக்கம் கடந்த சில ஆண்டு களாக சென்னையில் அதிகரித்துள்ளது.
- ❖ முத்தாலத்தி என்றொரு வகை கோலம் உள்ளது. நவராத்திரி நாட்களில் இந்த வகை கோலம் போட்டால் அம்பாள் அருள் நமக்கு எளிதாக கிடைக்கும்.
- ❖ நவராத்திரி 9 நாட்களில் வரும் வெள்ளிக் கிழமையன்று 5 சுமங்கலி பெண்களுக்கு அன்னதானம் செய்து புடவை மற்றும் தாம்பூலம் கொடுத்து ஆசி பெற்றால் உடனடியாக திருமணம் கைகூடும்.
- ❖ நவராத்திரி 5ம் நாள் லலிதாம்பிகையின் அவதார தினமாக கொண்டாடப்படுகிறது. அன்று 9 சிறுமிகளுக்கு பட்டுப்பாவாடை தானம் செய்தால் நினைத்தது நடக்கும்.
- ❖ நம்மூரில் முளைப்பாரி வைப்பது போல மராட்டி யத்தில் நவராத்திரி முதல் நாளன்று நவதானி யங்களை மண் கலசங்கில் வளர்ப்பார்கள். விஜயத சமியன்று அவற்றை ஊர் வலமாக எடுத்து சென்று ஆறுகளில் கரைத்து விடுவார்கள்.
- ❖ உடுப்பி கிருஷ்ணருக்கு நவராத்திரி 9 நாட்களும் சேலை கட்டி சிறப்பு பூஜைகள் நடத்தப்படும்.
- ❖ நவராத்திரி 9 நாட்களும் சர்க்கரைப் பொங்கல், உளுந்து வடை, நைவேத்தியம் செய்தால் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.
- ❖ நவராத்திரி தொடர்பான சுலோகம் மந்திரம் தெரியவில்லையா? கவலை படாதீர்கள் ஓம் ஸ்ரீ லலிதா தேவியே நம என்பதை 108 தடவை சொன்னாலே போதும். உரிய பலன் கிடைக்கும்.
- ❖ நெமிலியில் திரிபுர சுந்தரி கோவில் உள்ளது. இந்த கோவி லில் ஒரு நவராத் திரிக்கு கலசத்தில் வைக்கப் படும் தேங்காய் அடுத்த ஆண்டு நவராத்திரி வரை கெடாமல் இருக்கும்.
- ❖ தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோவிலில் முப்பெரும் தேவியர் இணைந்த அர்த்த நாரீஸ்வர துர்க்கை உள்ளது. 3 தலை, 8 கைகளுடன் இந்த துர்க்கை காணப்படு கிறாா்.
- ❖ கும்பகோணம் அருகில் உள்ள தேனு புரீஸ்வரர் கோவிலில் விஷ்ணு துர்க்கை எனப்படும் அஷ்ட புக துர்க்கா தேவி அருள்புரிகிறாள். 8 கரங்களுடன் உள்ள இந்த துர்க்கையின் ஒரு கையில் கிளி இருப்பது தனிச் சிறப்பாகும்.
- ❖ நவராத்திரி நாட்களில் முப்பெரும் தேவி யரின் கதைகளை கேட்டால் அம்மைநோய் தாக்காது என்பது நம்பிக்கை.
- ❖ சுகமான வாழ்வு வேண்டும், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும், அரசியலிலும், வேலையிலும் பதவி தொடர வேண்டும், எந்த தொழிலில் ஈடுபட்டாலும் வெற்றி மீது வெற்றி பெற வேண்டும் என்று நினைப் பவர்கள் நவராத்திரி பூஜையை அவசியம் செய்ய வேண்டும்.
- ❖ ராமபிரான் நவராத்திரி விரதத்தை கடை பிடித்த பிறகுதான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என்று தேவி பாகவதம் சொல்கிறது.
- ❖ ஜனமேஜயன் நடத்திய சர்ப்ப யாகத்தி லிருந்து நாகங்களை மானசாதேவி காப் பாற்றியதால் அவள் நாகேஸ்வரி என்று அழைக்கப்படுகிறாள். இவள் குருவான ஈஸ்வரரிடமிருந்துசித்தயோகத்தை கற்ற தால் சித்தயோமானசாதேவிஹ் நாமத்தைப் பெற்றாள். இவளது கணவர் ஜரத்காரு. நவராத்திரி காலத்தில் இவள் கதை பகுதி யைச் சொல்லி அர்ச்சிப்பதால் ராகு, கேது தோஷம், கால சர்ப்ப தோஷம் நீங்குகிறது.
- ❖ கொலு பொருட்களை பாதுகாக்க வேண் டியது முக்கியம். அவைகளில் மந்திர ஆவர்த்தி இருக்கும்.
- ❖ தேவியை நவராத்திரி சமயத்தில் ஒன்பது மடங்கு அதிகமாகப் பூஜிக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.
- ❖ எல்லாவற்றிற்கும் மேலானது சண்டிஹோமம். சண்டி என்பவள் மூன்று சக்திகளும் ஒன்றிய வடிவம். முப்பெரும் தேவியரையும் ஒன்றாக இணைத்து வழிபடுவதே இந்த ஹோமத்தின் சிறப்பு. விஜயதசமி நாளில் இதைச் செய்வதால் மிக நல்ல பலன்கள் பெறலாம்.


கீதா-ராஜன்

– கீதாராஜன், சென்னை

## கைதட்டி வணங்கும் விநாயகர்



ஒருமுறை வேட்டையாடுவதற்காக கணராஜா என்னும் அரசன் தன் பரிவாரங்களுடன் காட்டிற்கு வந்தான்.

அனைவருக்கும் பசி எடுக்கவே, அங்குள்ள கபில முனியின் குடிலுக்கு வந்து உணவு வேண்டினான். அவரும் அரசனுடன் வந்திருந்தவர்களுக்கும் உணவு அளித்தார். இந்த வனத்தில் எப்படி இத்தனை பேருக்கும் உணவு அளித்தார் என வியந்து ஆராய்ந்தான்.

முனிவரிடம் இருக்கும் சிந்தாமணி என்னும் ஆபரணம் முனிவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதைக் கண்டு, அதை அபகரித்துக் கொண்டான்.

வருத்தமடைந்த முனிவர் துர்க்கையிடம் சரணடைந்தார். "48 நாட்கள் விநாயகரை வழிபட்டால் ஆபரணம் கிடைக்கும்" என்றாள் துர்க்கை. முனிவரும் முறைப்படி வழிபாடு செய் யவே, விநாயகர் அதை மீட்டுக் கொடுத்தார்.

ஆனால் தன்னிடம் இருப்பதை விட விநாயகரிடம் இருப்பதே பொருத்தமானது என எண்ணி விநாயகர் கழுத்திலேயே அதை சூடிவிட்டார்.

அதுமுதல் சிந்தாமணி விநாயகர் எனப் போற்றப்பட்டார். மகாராஷ்டிரா மாநிலம் புனேவிற்கு அருகில் உள்ள தேவூரில் சிந்தாமணி விநாயகர் கோவில் அமைந்துள்ளது. இங்கு விநாயகரை கைகூப்பி யாரும் வணங்குவதில்லை. மாறாக கைதட்டியபடியே வழிபடுகின்றனர்.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# வாடாத மலராக மாறி ராமனுக்கு காட்சியளித்த ஸ்ரீவாடாமல்லீஸ்வரர்










திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீஸ்வரர் மலை கிரிவலம் சுற்றி வருகையில் கிரிவலப்பாதையில் அமைந்துள்ள திருவடிப்பூங்காவிலிருந்து வடக்கு நோக்கி சென்றால் சுமார் 5கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ஒரகடம் ஸ்ரீவாடாமல்லீஸ்வரர் கோயில்.

**கல்வெட்டு தகவல்:**

முதலாம் இராஜராஜன் காலத்தில் கி.பி.992–ல் வாடாமல்லீஸ்வரர் கோயில் கட்டப்பட்டுள்ளது. முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டு ஒன்று உறோடகம் என்ற பல்லவ சதுர்வேதி மங்கலம் என்கின்ற ஊரையும் வாடாமாலை ஆழ்வார் என இறைவனையும் அழைக்கின்றது (கி.பி.1016) வாடாமலை ஆழ்வார் வாடாமல்லீஸ்வரர் இரண்டும் ஒன்றே ஆகும்.

பழங்காலத்தில் சிவன் கோயிலுக்கும் ஆழ்வார் கோயில் என வழங்கும் வழக்கம் இருந்துள்ளது. உரோடகம் என்கின்ற ஊர் ஊராக மட்டுமின்றி நாட்டுப்பிரிவாகவும் விக்கிரமசோழன் காலத்தில் இருந்துள்ளது.

செங்கல்பட்டு மகாபலிபுரம் சாலையில் உள்ளது திருக்கழுக்குன்றம். இங்கிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது ஒரகடம்.

இங்கே சிறியதொரு மலையின் மீதுகோயில் கொண்டு, அருளும் பொருளும் அள்ளித்தருகிறார்









ஸ்ரீவாடாமல்லீஸ்வரர், அம்பாளின் திருநாமம் ஸ்ரீஅறம்வளர்த்தநாயகி!

**வாடாமல்லீஸ்வரர்? பெயர் காரணம்**

ஒருமுறை... சிவபெருமானின் தரிசனம் வேண்டி கடும் தவம் இருந்தாராம் ஸ்ரீராமன். ஆனால், வெகுநாட்களாகியும் அவருக்கு சிவதரிசனம் கிடைக்கவில்லை. கலங்கி தவித்த ஸ்ரீராமன், மனமுருக சிவபெருமானை பிரார்த்தித்தார்.

அப்போது அவருக்குள் ஓர் அசரீரி... 'ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகை மலரால் அர்ச்சித்து என்னை வழிபடுக. எந்த மலர் வாடாமல் இருக்கிறதோ... அன்று எமது தரிசனமும் வரமும் கிடைக்கும்!' என்று ஒலித்தது.

அதன்படியே செய்து வந்தார் ஸ்ரீராமன். ஒருநாள், மல்லிகை மலரால் அவர் சிவபிரானை அர்ச்சித்து வழிபட்டார். இந்த மல்லிகை பூக்கள் மூன்று நாட்களாகியும் வாடாமல் மணம் பரப்ப... அப்போதே ஸ்ரீராமனுக்கு சிவதரிசனம் கிடைத்தது; இறைவனும் ஸ்ரீவாடாமல்லீஸ்வரர் என்று திருநாமம் கொண்டார் என்கிறது தலபுராணம்.

7ஆம் நூற்றாண்டில், 2வது நந்தி வர்மன் எனும் பல்லவ மன்னனால் கட்டப்பட்ட ஆலயம் இது. அனைத்துக் கடவுளரும் உறையும் இடம் இது என்பதால் யுரகடம் எனப்பட்டு, பின்னர் ஒரகடம் என மருவியதாகச் சொல்வர்.

சிவபூஜை செய்த ஸ்ரீராமன், தன் காதிலும் ஒரு மல்லிகைப் பூவை வைத்துக் கொண்டிருந்தாராம்.


வேலன்

கருவறைக்கு எதிரே இருக்கும் நந்தி வித்தியாசமானவர்! ஒருமுறை... நந்தி தேவருக்குப் பரிசாக தன்னுடைய புலித் தோலை வழங்கினாராம் இறைவன்!

ஆமாம்... இங்கு உள்ள நந்திதேவர், புலித் தோலை அணிந்தபடி காட்சி தருகிறார். இது போன்ற நந்தி தரிசனம் அபூர்வம்!

வாடாமல்லீஸ்வரரை தரிசியுங்கள்; மனதில் உள்ள அத்தனை வாட்டத்தையும் போக்கி மல்லிகையாய் மலரச் செய்வார்!

**ஆலய அமைப்பு:**

ஊரின் மையப்பகுதியில் கோயில் அமைந்துள்ளது. சுமார் 150 படிக்கட்டுக்களுடன் உள்ள சிறிய மலைமீது கோயில் உள்ளது. மலைக்கு எதிரில் பெரிய குளம் அமைந்துள்ளது. அதில் தாமரைப்பூக்கள் அதிகம் மலர்ந்துள்ளன. மலைமீது ஏறி கோயிலுக்கு சென்றால் பெரிய சிவலிங்க சிலை தவம்இருக்கும் கோலத்தில் சிறிய குற்றின்மீது அமர்ந்தவாறு உள்ளது. கிழக்கு நோக்கி கருவரை அமைந்துள்ளது.

கருவரையின் முன்புறம் வினாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகன் சிலைகள் உள்ளது. ஆவுடையார் 3 அடி உயரத்தில் அமைந்துள்ளது. கருவரை கஜபிருஷ்டம் அமைப்பில் அமைந்துள்ளது.

கருவரை எதிரில் சூரியனார் சிலை அமைந்துள்ளது. கருவரை எதிரில் நந்தி அமைந்துள்ளது. புலித்தோல் அணிந்தபடி நந்திகாட்சி யளிக்கின்றார். வெளிபிரகாரம் சுற்றி வருகையில் நிறைவினாயகர்





சிலை அமைந்துள்ளது. அதனை அடுத்து தட்சணாமூர்த்தி சிலையும் அதனை அடுத்து விஷ்ணு சிலையும் அமைந்துள்ளது. அதனை அடுத்து பிரம்மா சிலையும் அம்மன் சிலையும் அமைந்துள்ளது. பிரம்மா சிலைக்கு எதிரில் சண்டிகேஸ்வரர் சிலை அமைந்துள்ளது.

அம்மன் சன்னதி தனியே அமைந்துள்ளது. அறம்வளர்த்த நாயகி அம்மன் பெயராகும். அம்மன் கோயிலினை அடுத்து பைரவர் சிலை அமைந்துள்ளது. கோயிலின் தெற்குப்பக்கம் நால்வர் கோயில் அமைந்துள்ளது. அதில் நால்வர் சிலைகள் உள்ளன. பௌர்ணமி, பிரதோஷம். சிவராத்திரி. மகாசிவராத்திரி மற்றும் சிவனுக்கு உகந்த நாட்களில் இங்கு விஷேஷங்கள் நடைபெறுகின்றது. கடந்த 25.11.2018 அன்று மகாகும்பாபிஷேகம் இந்த கோயிலுக்கு நடை பெற்றுள்ளது. அதனைபற்றிய தகவல் இங்குள்ள கல்லில் எழுதி வைத்துள்ளார்கள்.

**ஆலயசிறப்பு:**

ஸ்வாமிக்கு அர்ச்சித்த மல்லிகைப் பூவை காதில் வைத்துக் கொண்டு பிராகார வலம் வந்து வணங்கினால், காது தொடர்பான நோய்கள் நீங்கும் என்பது நம்பிக்கை. தவிர, ஸ்ரீவாடாமல்லீஸ்வரருக்கு மல்லிகைப்பூ மாலை சார்த்தி அர்ச்சனை செய்ய, நினைத்த காரியம் நிறைவேறும் என்பது ஐதீகம். அது மட்டுமா? வீண் பழி, தொழில் சிக்கல், உறவில் விரிசல், திருமணத் தடை என எந்தப் பிரச்னையாக இருந்தாலும், வாடாமல்லீஸ்வரரை தரிசித்து, பிரார்த்தித்தால் போதும். நம் கவலையெல்லாம் தீர்ந்து விடும் என்கின்றனர் பக்தர்கள்.

கருப்பைக் கோளாறு, கருச்சிதைவு எனப் போன்ற சிக்கல்களால் பிள்ளைப் பேறு வாய்க்கப் பெறாதவர்கள், தம்பதி சமேதராக இங்கு வந்து மலையடிவாரத்தில் உள்ள தீர்த்தக் குளத்தில் நீராடி, மஞ்சள் ஆடை உடுத்திக் கொண்டு, மடியில் மல்லிகைப் பூக்களை சுமந்தபடி வந்து, சிவனாருக்கு மல்லிகை மாலை அணிவித்து வேண்டினால், வீட்டில் விரைவில் தொட்டில் சத்தம் கேட்பது உறுதி.

ஆலய தொடர்புக்கு: திரு.தரணிராஜன், போன்: 9444346970.

**– வேலன், போன்: 9894836096**
**திருக்கழுக்குன்றம்.**


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# பெருமாள் கோவிலும் அற்புத தகவலும்

திருப்பதி ஏழுமலைக்கு மேல் உள்ள நாராயணகிரியில் ஏழு மலையானின் பாதச்சுவடுகள் பதிந்திருப்பதாகக் கூறப் படுகிறது. ஸ்ரீவாரி பாதம் எனப்படும் அந்த இடத்தில் திருமலைவாசனின் பாதச்சுவடுகளே வழிபடப்படுகின்றன.

❖ ❖ ❖

நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரம் போகிற வழியில் உள்ள திருவட்டாறு ஆதி கேசவப் பெருமாள் கோயிலில் அல்லாவுக்கு பூஜை நடக்கிறது.

❖ ❖ ❖

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள பெருமாளின் உற்சவத் திருமேனியில் மார்பில் சிவலிங்க அடையாளம் உள்ளது.

❖ ❖ ❖

உடுப்பி கிருஷ்ணருக்கு நவராத்திரி ஒன்பது நாட்களும் புடவை உடுத்துகிறார்கள்.

❖ ❖ ❖

ஆந்திராவில் பத்ராசலத்தில் ராமர் சங்கு, சக்கரத்துடன் காட்சியளிக்கிறார்.

❖ ❖ ❖

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள நாங்குநேரியில் பெருமாளுக்கு தினமும் மூன்று லிட்டர் எண்ணெய் சாத்தப்படுகிறது. பின்பு இது பக்தர்களுக்கு பிரசாதமாக வழங் கப்படுகிறது.

❖ ❖ ❖

சிவனைப்போல் முக்கண் உடைய பெரு மாளைக் காண, சிங்கபெருமாள் கோயில் செல்ல வேண்டும். இங்குள்ள மூலவர் நரசிம்மமூர்த்திக்கு மூன்று கண்கள் உள்ளன.

❖ ❖ ❖

திருக்கண்ணபுரத்தில் கண்ணபுரத்தான் பத்மாசனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள் என நான்கு தேவியருடன் சங்கு சக்கரம் தாங்கிக் காட்சியளிக்கிறார்.

❖ ❖ ❖

ஆசியாவிலேயே மிகப்பெரிய பள்ளி கொண்ட பெருமாள் உள்ள தலம் திருமயம். ஒரே மலையைக் குடைந்தமைத்த சிவன் திருமால் கோயில் இதுமட்டும்தான்.

❖ ❖ ❖

திருச்சி முசிறி சாலையில் உள்ள வேத நாராயணன் கோயிலில் பெருமாள் அனைத்து வேதங்களையும் தலையணையாக வைத்துப் படுத்திருக்கிறார். இதனால் அவரும் வேத நாராயணன் என்று பெயர்.

❖ ❖ ❖

காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள அத்திவரதர், அனந்தசரஸ் என்ற திருக்குளத்தில் நீருக்கு அடியில் நிரந்தரமாக எழுந்தருளியுள்ளார். 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியே வந்து மக்களுக்கு காட்சி தரும் இவரது தரிசனம் 2019ம் ஆண்டு கிடைக்கும்.

❖ ❖ ❖

திருக்கோவிலூரில் உள்ள மூலவர் இலுப்பை மரத்தால் ஆனவர். இவரது பெயர் திருவிக்ரசுவாமி.

❖ ❖ ❖

கர்நாடகத்தில் உள்ள ஸ்ரீரங்கபட்டினத்தில் உள்ள ரங்கநாதர் எழுந்தருளியுள்ள ஆதி சேஷனுக்கு ஏழுதலைகள் இருப்பது வித்தியாசமானது.

❖ ❖ ❖

திருமலை, தான்தோன்றிமலை, உப்பிலியப் பன்கோயில், குணசீலம் ஆகிய நான்கு பெருமாள் கோயில்களிலும் தாயாக்கு சன்னதி இல்லை.

❖ ❖ ❖

பொதுவாக பெருமாள் ஆதிசேஷன் மேல் சயனித்தபடி இருப்பார். ஆனால் ஸ்ரீவைகுண்டத்தில் நத்தத்தில் ஆதிசேஷன் குடைபிடிக்க, பெருமாள் நின்ற கோலத்தில்







காட்சி தருகிறார்.

❖ ❖ ❖

காஞ்சிபுரத்தில் உள்ள விளக்கொளிப் பெருமாள் கோயிலில் பெருமாள் ஜோதி வடிவில் இருப்பதாக ஐதிகம். இங்கு பெரிய கார்த்திகை அன்று பெருமாளுக்கு விளக்கேற்றி வழிபடுகிறார்கள்.

❖ ❖ ❖

கருங்குளத்தில் பெருமாளை மூன்று அடி உயரமுள்ள சந்தனக்கட்டை வடிவில் வைத்து அபிஷேக ஆராதனை செய்து பூஜித்து வருகிறார்கள். இதற்கு இரண்டு பக்கமும் சங்கு, சக்கரம் இருக்கிறது.

❖ ❖ ❖

மாமல்லபுரம் ஸ்தலசயனப் பெருமாள் கோயிலில் பெருமாள் ஒரு கரத்தை தலைக்கு வைத்துக் கொண்டு தரையில் சாய்வாகக் கால் நீட்டி சயனம் கொண்டிருக்கிறார். சங்கு, சக்கரம் இல்லை.

❖ ❖ ❖

காஞ்சி உலகளந்தபெருமாள் திருக்கோயி லில் திருமழிசையாழ் வாராலும், திருமங்கை மன்னராலும் மங்களாசாசனம் செய்யப்பட்ட நான்கு திவ்ய தேசங்கள் உள் ளன. பேரகம், நீரகம், காரகம், கார்வானம் ஆகியவையே அவை.

❖ ❖ ❖

இந்தியாவில் நவதிருப்பதிகளும் தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி நதிக்கரையில் உள்ளது.

❖ ❖ ❖

ராமேசுவரம் தீர்த்தயாத்திரை வந்த பெருமாள் பக்தர் ஒருவருக்கு ஏழுமலையான் காட்சி அளித்த இடமாக சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகைஆற்று கரையில் அப்பன்பெருமாள்கோவில் உள்ளது.

❖ ❖ ❖

ராமபிரான் பிறப்பதற்க்காக தசரத மன்னர்க்கும் அவரது மனைவிக்கு ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஆதிஜெகநாதர் கோவிலில் இருந்து பூஜித்த பாயாசம் அனுப்பட்டதாக கூறப்படுகிறது. இங்கு இன்றும் குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு பூஜை செய்த பாயாசம் சன்னதியில் வழங்கப்படுகிறது.

❖ ❖ ❖

சிவகங்கை மாவட்டம் வேம்பத்தூரில் பக்தர்களை இடது கையால் வா என்று அழைத்து வலது கையால் ஆசி வழங்கும் கோவிலாக பூமிநீளாசுந்தரராஜபெருமாள் கோவில் உள்ளது.

❖ ❖ ❖

ஆண்டாள் பிறந்த ஊர் ஸ்ரீ வில்லி புத்தூரில் திருமலை திருப்பதி போல் திருவண்ணா மலையில் கோவிந்தராஜ பெருமாளாக காட்சி தருகிறார். தென் திருப்பதி எனவும் அழைக்கப்படுகிறது.

❖ ❖ ❖

மதுரை திருமாலின் சோலை என அழைக்கப்படும் அழகர் கோவிலில் நூபுரகங்கை தீர்த்தம் பெருமாள் பாதத்தின் வழியே வருவதாக கூறப்படுகிறது. இதில் தீர்த்தம் ஆடும் பக்தர்கள் வேண்டுதல்கள் இன்றும் நிறைவேறி வருகிறது.

❖ ❖ ❖

வடகலை மரபினர் வேதங்கள் மற்றும் பஞ்சராத்திர ஆகமங்கள் போன்ற வடமொழி நூல்களைப் பின்பற்றியும் தென்கலை மரபினர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போன்ற தமிழ் நூல்களைப் பின் பற்றியும் பெருமாள் கோவில்களில் வழிபாடு செய்கின்றனர்.


அழகுராஜா

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182



மலைமீது ஆடுகளை மேய்த்து வந்தான் ஓர் ஊமைச் சிறுவன். ஆதியிலிருந்தே மலை உச்சியில் "உத்தமராயர்" என்கிற பெயருடன் பெருமாள் சிலை ஒன்று இருந்தது. ஆடுகளை மேய்க்க வந்த சிறுவன் புதிய இடம் நாடி மலை உச்சிக்குச் செல்கின்றான். அப்போது அங்கிருந்த பெருமாளின் கற்சிலையை காண் கிறான். தனது நிலைக்காக கண்ணீர் மல்க வேண்டுகின்றான்.

உடன் அவன் தன்னையும் அறியாமல் "உத்தமராயா" என்று அலறினான். அவனுக்கு பேசும் திறன் வந்துவிட்டது. ஆனந்தத்தில் துள்ளிக் குதித்த அச்சிறுவன் இச்செய்தியை ஊர் முழுதும் பிரப் பினான்.

அது முதல் மக்களும் இந்த பெருமாளை வழிபடத் தொடங்கினர். அன்று முதல் உத்தமராயப் பெரு மாள்..." ஊமைக்கு வாய் கொடுத்த உத்தமராயப் பெருமாள்" என்று போற்றலானார்.

விஜயநகர மன்னர்களின்

# ஊமையை பேச வைத்த ஸ்ரீ உத்தமராய பெருமாள்

இவ்வுலகைப் படைத்து, வழிநடத்தும் இறைவன், அவரவரது பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப உயிர்களை பல வகையாகப் படைகின்றார். அதேசமயம் அவ்வுயிர்களின் குறைகளைக் களையவும், பல்வேறு திருத்தலங்களில் எழுந்தருளி, இடர் நீக்குகின்றார். அப்படி இறையருள் நிறைந்த ஓர் அற்புத மலைத்தலம்தான் பெரிய அய்யம்பாளையம் ஊமைக்கு வாய் கொடுத்த ஸ்ரீ உத்தமராய பெருமாள் ஆலயம்.

"ஓங்கி உலகளந்த உத்தமன்" என்கிற ஆண்டாளின் வரிக்கேற்ப உத்தமனாய் வீற்றிருக்கும் திருமால், இங்கு ஊமையை பேச வைத்த காரணத்தால்.....ஊமைக்கு வாய் கொடுத்த உத்தமராய பெருமாள் என்றழைக்கப்படுகின்றார்.

முன்பொரு சமயம் இந்த அய்யம்பாளையத்திலுள்ள

ஆட்சிக் காலத்தில் பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட ஊரே அய்யர்பாளையம். அதுவே நாளடைவில் மருவி இன்று அய்யம்பாளையம் ஆகிவிட்டது. விஜயநகரப் பேரரசின் கலைப்பாணி இவ்வாலயத்தில் தெரிவதாலும், அய்யம்பாளையம் குன்றின் கீழ் உள்ள மண்டபம் ஒன்றில் அவர்கள் காலக் கல்வெட்டு ஒன்று உள்ளதாலும், இவ்வாலயம் விஜயநகர மன்னர் ஒருவர் கட்டியிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.







அய்யம்பாளையம் ஊரின் வடக்கே சிறு குன்றின் மீது உத்தமராய ஆலயம் அமைந்துள்ளது. மலையின் கீழ் திருக்குளமும், சுனை ஒன்றும் காணப்படுகின்றது. சுமார் 150 படிகளை கொண்ட இவ்வாலயத்தின் கீழே விநாயகர், பாலமுருகன் மற்றும் நவக்கிரக சன்னதிகள் அமையப் பெற்றுள்ளது. இக்குன்று மிகுந்த வனப்புடன் அற்புதமாக காட்சி அளிக்கின்றது. சிறுசிறு கற்களாலான 150 படிகளை கடந்தால், அழகிய ஆலயத்தை அடையலாம். ஆலயத்திற்கு வெளியே சிறிய திருவடியான ஆஞ்சநேயர் சன்னதி அமையப் பெற்றுள்ளது. ஆலயம்... மகா மண்டபம், அந்த்ராளம், கருவறை என்கிற அமைப்புடன் அமைந்துள்ளது. மூலஸ்தானத்தில் ஸ்ரீ உத்தமராய பெருமாள் நின்ற கோலத்தில் பேரருள் பொழிகின்றார். தாயார் சன்னதி கிடையாது. ஆழ்வார்கள் மகாமண்டபத்தில் வீற்றுள்ளனர். தனி விமானத்துடன் கூடிய பெருமாள் சன்னதி காண்போரை கவர்ந்திழுக்கின்றது.

தற்பொழுது வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இங்கு திரளான பக்தர்கள் கூடி பேச்சிழந்த தங்களது பிள்ளைகளுக்காக வரதமிருந்து, பெருமாளுக்கு அர்ச்சனை வழிபாடு செய்து செய்கின்றனர். பெருமாளுக்கு அபிஷேகம் செய்த தேன் திக்குவாய் உள்ள மற்றும் உண்மையாக இருக்கும் குழந்தைகளுக்கு நாக்கினால் வைக்கப்படுகிறது. தொடர்ந்து ஏழு சனிக்கிழமைகளில் இங்கு வந்து வழிபாடு செய்யும் பக்தர்களின் பேச்சு குறைகள் தீர்ந்து, பேச்சு வந்ததும் மீண்டும் இங்கு வந்து நேர்த்திக்கடன் செலுத்தி செல்கின்றனர்.

சனிக்கிழமைகளில் மட்டும் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை ஆலயம் திறந்திருக்கும். அன்று சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். புரட்டாசி சனிக்கிழமைகளில் பக்தர்கள் கூட்டம் இங்கு அலைமோதும். வருடாவருடம் காணும் பொங்கலுக்கு மறுநாள் இங்கு திருவிழா நடக்கிறது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு பெருமானின் திருவருளைப் பெறுகின்றனர். திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டத்தில் உள்ள இந்த அய்யம்பாளையம் ஆரணியில் இருந்து சுமார் 14 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

ஆரணி வேலூர்பேருந்து தடத்தில் உள்ள அத்திமலைப்பட்டிலிருந்தும், வேலூர் திருவண்ணாமலை சாலையில் உள்ள வண்ணாங்குளத்திலிருந்தும் இவ்வாலயத்தை எளிதில் அடைந்திடலாம். கண்ணமங்கலத்தில் இருந்து இங்கு வர ஆட்டோ மற்றும் பேருந்து வசதி உள்ளது



மோ.கணேஷ்

– ஜோதிட கலாநிதி பழங்காமூர்
மோ.கணேஷ்குருக்கள்,
ஆரணி.
தொடர்புக்கு: 9789156179

## சாது மிரண்டால் காடு கொள்ளாது

# கடவுளை கேலி செய்தவர்களை ஓடவிட்ட தேவர்



**இந்து மதத்திற்கு இதுபோன்ற தலைவர்கள் அவசியம் தேவை... இவர் என்ன செய்தார்? ஒரு சிறு சம்பவமே இவரின் தேவையை உணர்த்தும்...**

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்தின் உள்ளே 10 நாட்கள் தமிழ்ச்சங்க கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது

முதல் நாள் கூட்டத்தில் ராஜாஜி பேசினார்

இரண்டாவது, மூன்றாவது நாள் கூட்டங்களில் வேறு வேறு ஆட்கள் பேசினார்கள்

நான்காவது நாள் மேடை தமிழ் என்கிற தலைப்பில் PT ராஜன் பேச வேண்டி இருந்தது.

ஆனால், பத்திரிக்கையில் பெயர் கூட இல்லாத அவருடைய நண்பர் அண்ணாதுரையை அழைத்து பேச வைக்கிறார்

அண்ணாதுரை பேசுவதற்குமுன் சேலத்தை சேர்ந்த மணிமேகலை என்ற சிறுமி பேச்சு போட்டியில் பல்வேறு விஷயங்களை எடுத் துரைத்து பரிசுகளை பெறுகிறார்

அதன் பின் மேடையில் பேசிய அண்ணாதுரை, ‘‘இன்றைக்கு மணிமேகலை என்ற சிறுமி அருமையாக பேசினார், இதுவே அந்தக் காலமாக இருந்திருந்தால் உமையவள் ஞானப்பால் கொடுத்ததால் தான் இந்த சிறுமிக்கு பேச்சு வந்தது என கதை கட்டி விட்டிருப்பார்கள்.

சீர்காழி குளக்கரையில் திருஞானசம்பந்தர் சிறுவனாக இருந்த போது உமையவள் ஞானப்பால் கொடுத்ததால் தான், தேவாரமும், திருவாசகமும் பாடினார் என்று கதை கட்டி



விட்டது போன்று, இந்த சிறுமிக்கும் கதை கட்டி விட்டிருப்பார்கள்'' என கேலி செய்து பேசினார் அண்ணாதுரை.

இந்த சம்பவம் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் கவனத்திற்கு செல்கிறது....

மறுநாள் "சேதுபதி தமிழ் பற்று" என்ற தலைப்பில் 6ஆம் நாள் பேசுவதாக இருந்த முத்துராமலிங்க தேவர் அவர்கள்,

5ஆம் நாள் கூட்டத்தில் பேச... நிகழ்ச்சி நடக்கும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்துக்குள் கோபமாக வருகிறார்.

அப்பொழுது **PT** ராஜன்,

‘‘நீங்கள் நாளை 6ஆம் நாள் கூட்டத்தில்தான் பேச வேண்டும்'' என்று கூற,

‘‘அப்படியானால் நேற்று அண்ணாதுரை எப்படி பேச வந்தார்?'' என கேட்டு தனது புறங்கையால் பி.டி.ராஜனை தள்ளிவிட்டு மேடை ஏறுகிறார் முத்துராமலிங்க தேவர்.

மேடையில் ஏறியவுடன், **‘‘மேடைகளில் மரபுகளை மீறுவது அடியேனுக்குஇது தான் முதலும் கடைசியும்'' என்று தனது உரையை ஆரம்பித்து பேசும் போது...**

**‘‘காஞ்சிபுரத்தை சேர்ந்த ——— தெரியாத மகனை (அண்ணாதுரை) மீனாட்சி அம்மன் ஆலயத்துக்குள் நாத்திகம் பேச அனுமதித்தவன் யார்?**

**உமையவள் ஞானப்பால் கொடுத் தாள் என்பதை கட்டு கதை என்று சொன்னவன் யார்?**

**64 சிவபுராணம் நடந்த இந்த மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்துக்குள்ளே, நாத்திகம் பேச அனுமதித்தவன் யார்?''**

என முத்துராமலிங்க தேவர் சரமாரியாக கேள்வி எழுப்ப....

அங்கே இருந்த பி.டி.ராஜனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை....

தொடர்ந்து பேசிய தேவர் அவர்கள்,

**‘‘மதுரை மீனாட்சிக்கு பல்வேறு அபி ஷேகங்கள் நடந்துள்ளது, இனி இந்த கூட்டம் தொடர்ந்து நடந்தால் மனித ரத்தத்தில்தான் அன்னை மீனாட்சிக்கு அபிஷேகம் நடக்கும், அதற்கும் அடி யேன் சித்தமாக உள்ளேன்''** என்று எச்சரிக்கை செய்தார்.

இதைத் தொடர்ந்து பி.டி.ராஜன் தலைமையில் நடைபெற்ற கூட்டம் கலைக்கப்பட்டது, மேலும் தொடர்ந்து தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற கூட்டமும் ரத்து செய்யப்பட்டது.

இந்து மத காப்பாளராகவும், சுதந்திர வேட்கை யில் தேசத்தந்தை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் நிழலாய் இருந்ததினால்தான் திரு. உ.முத்துராமலிங்க தேவர் அவர்களை ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு தலைவராக பார்க்காமல் அவரை தேசிய தலைவராக பார்க்கின்றனர் மக்கள்.

இந்து மதத்திற்கு இதுபோன்ற தலைவர்கள் அவசியம் தேவை....



# மக்களின் வேதமாக விளங்கும்

# அதர்வண வேதம்

**கடவுள் உருவாக்கிய மதம்**

அதர்வண வேதம் கடைசி வேதமாக கருதப்படுகிறது ஏறக்குறைய யஜூர், சாம வேதங்கள் உருவான காலத்திலேயே அதர்வணம் உருவாகி விட்டது என்றாலும் அது அப்போது வேதமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை பகவத் கீதையில் கூட முதல் மூன்று வேதங்களை பற்றி விபரங்கள் தெரிவிக்கப்படுகிறது தவிர அதர்வணத்தை பற்றி பெரியதாக எதுவும் கூறப்படவில்லை இதனால் மகாபாரத காலத்திற்கு பின்னரே அதர்வணம் வேதம் என்ற அந்தஸ்தை பெற்றிருக்க வேண்டும் என்று கருத முடிகிறது.

ரிக் வேதம் தெய்வங்களை அறிமுகப் படுத்தி அவர்களின் பாதுகாப்பை எப்படி பெறலாம் என்று கூறுகிறது. யஜூர் வேதம் தெய்வங்களுக்கான சடங்கு முறைகளை விரிவாகக் கூறுகிறது. சாம வேதம் சோமபானம் முதலிய பொருட்களை உருவாக்குதலை பற்றி கூறுகிறது தெய்வத்தால் மட்டுமே மனிதர்கள் கலப்பில்லாத நன்மைகளை பெறலாம் என்பது இந்த வேதங்களின் பொதுவான கொள்கை ஆகும். தெய்வங்களை அடைவதற்கு மனிதர்கள் மனம் என்னும் படகை கொண்டுதான் பயனிக்க வேண்டுமென்று இந்த வேதங்களின் கருத்துகளை ஒட்டி உபநிஷதங்களும் பறைசாற்று கின்றன.

அதர்வண வேத பாடல்களும் யாக தேவதைகளை போற்றுகின்றன. உதவிகளை கேட்கின்றன அதே நேரம் தெய்வங்கள் தரும் உதவி என்பது மனித உடல்களின் அவஸ்தைகளை தவிர்ப்பதாக இருக்க வேண்டுமே தவிர கஷ்டங்களை ஏற்படுத்துவதாக இருக்க கூடாது என்று தெளிவாக வலியுறுத்துகிறது.

ஆத்மாவானது செயல்பட வேண்டு மென்றால் சரீரம் என்பது அவசியம் தேவை ஆத்மாவை தாங்கி நிற்கும் உடல் உயிர் இல்லாவிட்டால்இயங்காது உடலின் இயக்கம் நின்று விட்டால் அதாவது உடலும் உயிரும் தனித்தனி ஆகிவிட்டால் ஆத்மாவால் எதையும் செய்ய முடியாமல் போய்விடும் எனவே உடம்பு என்பது அவசியமான பொருள் என ரிஷிகள் கருதினர்.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

எனவே அவர்கள்உடம்பை நோய்களிடமிருந்தும் மற்றஅபாயங் களிலிருந்தும் பாதுகாத்து பத்திரப் படுத்த வேண்டும் என்கின்ற கருத்துகளை முதன்மையாக வைத்து பாடல்களை இயற்றினர். அத்தகைய பாடல்களின் தொகுப்பு தான்அதர்வண வேதமாகும். இந்த வேதத்தில் 5987 பாடல்கள் உள்ளன. இந்த பாடல்களில் நோய்களிலிருந்து மனிதனை பாதுகாக்கும் படி வேண்டுகின்ற பாடல்களே மிகுதியாக உள்ளது.

ஆரோக்கியத்தை விரும்பும் கோரிக்கைகள் அதிகமாக பல பாடல்களில் வெளிப்பட்டாலும் கூட வேறுசில பாடல்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைக்கிறது திருமணம் ஆகாத குமரி பெண்களுக்கு திருமணம் வேண்டியும் வயதான பிறகு கூட திருமணம் முடியாமல் தனிமையில் தள்ளாடும் ஆண்களுக்கு தக்க துணை வேண்டியும் குழந்தைகள் இல்லாதவர்கள் மழலைச் செல்வங்களை பெற்று மகிழ்வுற வேண்டியும் கடவுளிடம் முறையிடும் பாடல்கள் இருக்கின்றன.

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் மலட்டுத் தன்மையை போக்கவும் கருச்சிதைவுகளை தடுத்து நிறுத்தவும் கோரிக்கை வைக்கும் பாடல்களும் உள்ளன. இது மட்டுமல்ல பொறாமைகளை பொ சுக்கும் படி சச்சரவுகளை நீக்கும்படி பேதங்களை மேலெழும்பாமல் அமுக்கும் படியும் கோபத்தை குறைக்கும் படியும் வீடுகட்டிக் கொள்ள உதவி செய்யும் படியும் விதை விதைக்கும் போதும் பயிர் களில் பூச்சிக்கள் பரவும் போதும் விளைச்சல் வீட்டுக்கு வந்து சேரும்போதும் கடவுளை பக்கத் துணையாக இருந்து பாதுகாத்து தரும்படி கேட்கின்ற பாடல்களும் அதர்வண வேதத்தில் உள்ளன.

ஆயுதங்களைக் கொண்டும் ஆள் பலத் தைக் கொண்டும் வெற்றி பெற முடியாத எதிரி களை மந்திரங்கள் கொண்டு செயலிழக்கம் செய்ய வைக்கும் வகைகளும் மேலும் பல மாந்திரீக ரகசிய வித்தைகளும் அதர்வண வேதத்தில் ஆழமாக விளக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த வேதத்தை மக்களின் வேதம் என்று பல ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். காரணம் மக்களுக்கு ஏற்படும் நோய் நொடியிலிருந்தும் அரசுகளுக்கு ஏற்படும் ஆபத்துக்களிடமிருந்தும் ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த பிரச்சனைகளிலிருந்தும் வெளிவருவதற்கான அனைத்து விதமான ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் அதர்வண வேதம் காட்டுவதனால் அப்படி அழைக்கப்படுகிறது.

உதாரணமாக ஜுரத்தினால் துன்பப்படும் மனிதனை காப்பாற்றும் படி அக்னி தேவனை துதிக்கும் ஒரு பாடல் அதர்வண வேதத்தில் இருக்கிறது. இந்த பாடலை முறையான சந்த லயத்துடன் நோயாளியின் முன்பு பாடினால் எத்தகைய ஜுரமாக இருந்தாலும் ஒரு மணி நேரத்தில் குறைந்து விடுகிறது மேலும் குழந்தை பேரு தருகின்ற மந்திரத்தால் புத்திரகாமேஷ்டி யாகம் செய்தால் தசரதனுக்கு மட்டுமல்ல சாதாரண தச்சுத் தொழிலாளிக்கும் கூட குழந்தை பிறக்கிறது. இதை நாம் வேதங்களை புகழ்ந்து பேச வேண்டும் என்பதற்காக கூறவில்லை. எனது சொந்த அனுபவத்தாலும் என் கண்முன்னே மற்றவர்கள் பெற்ற அனுபவத்தாலும் கூறுகிறேன். காய்ச்சலை விரட்டும் அதர்வண வேத பாடலை தமிழ் வடிவில் பார்ப்போம்.

அக்னி பகவானே ஜுரம் என்ற துர்தேவதையை இங்கே இருந்து விரட்டி அடி. சோமனையும் வருணனையும் உன்னுடன் சேர்த்துக்கொள். அவர்கள் ஆற்றல் மிகுந்தவர்கள் சக்தி தரும் சோமனும் குளிர்ச்சித் தரும் வருணனும் அக்னியாகிய நீயும் திரி சூலம் போல் இணைந்தால் இந்த நோய் தங்கி கொடுமைபடுத்தும் தேவதை புற்களின் மீதும் நெருப்பு குண்டங்கள் மீதும் அமர்ந்திருக்கும் தெய்வங்களே இந்த ஜுரம் என்ற தீயசக்தியை வெகுதூரம் துரத்துங்கள்.

இந்த தீய சக்தி மனிதனை பிடித்து விட்டால் அவனை அது எப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறது. நெருப்பு குண்டமாக அவனது உடலை மாற்றி சக்திகள் அனைத்தையும் உறிஞ்சி விடுகிறது. பழங்களின் சாறை உறிஞ்சி விட்டு சக்கைகளை தூர எறிவது போல் மனித உடல்களையும் ஜுரம் செயல்பட முடியாதவனாக மனிதன்





மாறிவிடுகிறான். முப்பெரும் தெய்வங்களே இந்த தீயவனின் கொட்டத்தை ஒடுக்குங்கள். அவனை கீழே விழ்த்துங்கள். மீண்டும் அவன் எழுந்து வராத வண்ணம் குழிதோண்டி புதைத்து விடுங்கள்.

இதோ அந்த தீயவன் வந்துவிட்டான். உடம்பில் குடியேறிவிட்டான். அதற்கான அடையாளங்கள் உடல் முழுவதும் பூரான்கள் போல் நெளிகிறது. மண்ணில் புதைக்கப்பட்ட விதைகளிலிருந்து சிவப்பு நிற முளைகள் வெளிவருவது போல் உடல்முழுவதும் செம்புள்ளிகள் வரிசையாக பரவி மனிதனை வாட்டுகிறது. உடல்களை வாட்ட அந்த தீயவன் பிரயோகம் செய்யும் ஆயுதங்கள் தான் இந்த சிவப்பு புள்ளிகளோ தெய்வங்களே விரைந்து வாருங்கள் அவன் ஆயுதத்தின் முனைகளை ஒடித்து போடுங்கள் ஆயுதம் வலுவிழந்து விட்டால் ஒடி விடுவான் அல்லவா. அவனைதப்பி செல்ல விடாதீர்கள். மறைந்திருந்து மறுபடியும் தாக்குவான் எனவே அவனை புதைத்துவிடுங்கள்

இவன் எப்போதும் தனி ஆளாக வருவது இல்லை. இருமல் என்ற சகோதரனையும், எரிச்சல் என்ற தங்கையையும், நடுக்கம் என்ற மாமனையும் இன்னும் வித விதமான உறவு முறைகளையும் அழைத்து வந்து கும்பலாக தாக்குவான் அவர்கள் ஒவ்வொருவன் உருவங்களும் கண்டுபிடிக்க முடியாதவாறு மாயங்கள் நிரம்பியதாகவும் மர்மங்களின் வடிவங்களாகவும் இருக்கும் மரண தேவனே வந்து வைத்தியம் செய்தால் இவர்களின் கொட்டம் அடங்குமோ என்னவோ தெரியவில்லை. சக்தி மிகுந்த அக்னி தேவதையே கரம் கூப்பி மண்டியிட்டு வேண்டுகிறோம். இந்த தீயவர்களை விரட்டு இனிமேலும் தலைகாட்டாதவாறு அடக்கு.

மேலே சொன்ன பாடலை மீண்டும் ஒருமுறை படித்து பாருங்கள் ஜூரத்தை பற்றி மட்டுமல்ல அம்மை நோயின் அறிகுறியை பற்றியும் விளக்கப்பட்டிருப்பதை காண்பீர்கள். மேலும் அந்த தீயவனை புதைத்து விடுங்கள் என்று தேவதைகளை வேண்டுவதை வைத்து பார்க்கும் பொழுது நோயை புதைக்க தெய்வங்களை வேண்டிவிட்டு நோய்பாதித்து இறந்தவர்களை தகனம் செய்யாமல் புதைத்து விடும் பழக்கமும் அக்காலத்தில் இருந்திருப்பதை உணரலாம். நோயை விரட்ட பிரார்த்தனை செய்வது மட்டுமல்ல சிகிச்சை முறைகளையும் மேற்கொண்டு இருப்பதற்கான ஆதாரங்கள் தெரிகிறது.

பொதுவாக அதிகரித்துவிட்ட உடல் சூட்டை வெளியேற்றுவதற்கு ஜூரமும் வெளியேற்ற கால





தாமதமாகியே அல்லது கிருமிகளின் தாக்குதலில் முடியாமல் போனதாலும் அம்மை நோய் வருவது உண்டு. இந்த நோய்களுக்கு இன்றைய நவீன உலகில் பல மருந்துகள் இருப்பது போலவே வேதகாலத்திலும் குஷ்த்தா என்ற மூலிகைமருந்து கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்திருக்கிறது மலை பகுதிகளில் மட்டுமே கிடைக்கும் அந்த மூலிகையை தெய்வமாகவும் அம்மக்கள் கருதி இருக்கிறார்கள். அதை விளக்கும் ஒரு பாடலில் சில பகுதிகளை பார்ப்போம்.

குஷ்த்தாவே நீ ஜீரத்தை அழிக்கும் தெய்வம் என்னிடமிருந்து அந்த தீயவனை விரட்டி அடித்தது நீ தான். உன்னை நான் வணங்குகிறேன். உலக தாவரவர்க்கங்களில் தலைவனான உன்னை மலைகளிள் மீதும் நான் கண்டேன். கழுகுகள் கூடுகட்டும் எட்டாத உயரத்தில் நீ இருக்கிறாய். நீ எங்களை தாக்கும் ஜூரம் என்ற துர்தேவதையின் வருகையை அறிந்தாலே எந்த உயரத்தில் இருந்தாலும் எங்களுக்காக இறங்கி வருகிறாள். இமவானின் மகளான கங்கையை விடவும் வேகமாக நீ எங்களை நோக்கி வருகிறாய். நீயே எங்களின் கருவூலம் உனது பெருமையை ஊரெல்லாம் எடுத்துறைப்போம்.

அரசமரம் என்பது தேவதைகள் குடியிருக்கும் புனிதபீடம் அதன் நிழலில் தான் தெய்வங்கள் வாழ்கிறார்கள். அந்த மரம் சொர்கத்திலிருந்து பூமிக்கு வந்ததாகும். தேவர்கள் அதன் நிழலிலிருந்தான் அமிர்தத்தை தயாரிக்கின்றார்கள். இந்த மரத்திற்கு குஷ்தா தனது சக்தியை வழங்கி இருக்கிறது. இதன் பட்டைகளும் வேர்களும் அமிர்தத்திற்கு ஒப்பானது சோமபானம் தயாரிப்பதை போல் இதை தயாரித்து குடித்து ஜூரம் என்னும் விரோதியை ஓட ஓட விரட்டுங்கள்.

குஷ்தா என்ற அமிர்தத்தை மலைகளின் மீதும் தேவர்கள் எப்படி அனுப்புகிறார்கள். தலை நகரத்திலிருந்து அரசனானவன் எத்தகைய ராஜ மரியாதையுடன் எல்லை புறத்திற்கு செல்வானோ அதே போலவே குஷ்தாவும் சொர்கத்திலிருந்து மலை முகடுகளுக்கு வருகிறாள். அமிர்தமான அவள் வரும்பாதை தங்கத்தால் ஆனது. அது எப்போதும் ஒளிமயமாகவே இருக்கும் தங்க ரதத்தில் அவள் வருவாள்.

அவள் தேரை இழுக்கும் குதிரைகள் தங்க நிறமானது. அவைகளும் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டே இருக்கும் உயர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்டு உயர்ந்த வாகனத்தால் குஷ்தா என்ற அமிர்த தேவதை நம்மையும் உயர்த்துவாள் இவள் நமது அருகாமையில் வந்துவிட்டாலே போதும் நம்மை படுக்க வைக்கும் புரள வைக் கும் இம்சை செய்யும் ஜூர அசுரன் பயந்தே ஓடிவிடுவான். எனவே குஷ்கா தேவதையை துதிப்போம்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 09442426434

# கண்ணுக்குப் புலப்படும் உலகங்களினுடைய கண்ணுக்குப் புலப்படாத ஆதாரம்

அன்பு குருதேவர் அருளுகிறார்: "விண்வெளி இரண்டு பகுதிகளாக அல்லது அம்சங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. விண்வெளியின் ஒரு புறத்தில் படைப்பு உள்ளது. மறுபுறத்தில் இறைவன் மட்டுமே உள்ளான். அங்கு படைப்பு முற்றிலும் இல்லை. அதுவே இருளற்ற இருளும், ஒளியற்ற ஒளியும் உள்ள உலகமாகும். சூரியனோ அல்லது சந்திரனோ அல்லது நெருப்போ பிரகாசிக்காத இடம் எதுவோ, அதுவே எனது மகத்தான உறைவிடமாகும்," என கீதையில் பகவான் கிருஷ்ணன் கூறுகின்றான். (பகவத் கீதை அத்.15 ஸ்லோகம் 6) ,இவ்விதமான இரட்டைத்தன்மை மனிதனுடைய உணர்வு நிலைக்கும் பொருந்தும். உங்களுடைய இருப்பிற்கு இரு பக்கங்கள் உள்ளன. ஒன்று கண்ணிற்குப் புலப்படுவதும், மற்றொன்று கண்ணிற்குப் புலப்படாததும். திறந்த கண்களுடன் புற உலக படைப்பையும் , அதனுள் உங்களையும் காண்கிறீர்கள். மூடிய கண்களுடன் ஒன்றையும் காணாது, சூனிய இருள் வெளியைக் காண்கிறீர்கள். உருவத்திலிருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தாலும், உங்களுடைய உணர்வுநிலை தொடர்ந்து தீவிர விழிப்புடனும் செயற்பாட்டுடனும் உள்ளது. ஆழ்ந்த தியானத்தின்போது மூடிய கண்களுக்குப் பின்னே உள்ள இருளை ஊடுருவினால், எதிலிருந்து அனைத்துப் படைப்பும் வெளிப்படுகிறதோ அந்தப் பேரொளியைக் காண்பீர்கள். ஆழ்ந்த சமாதி மூலம் உங்களுடைய அனுபவம் இந்த வெளிப்படுத்தப்பட்ட பேரொளியையும்கூடக் கடந்து, முழுமையான பேரானந்த உணர்வு நிலைக்குள் நுழைகின்றது. அந்த நிலை எல்லா உருவத்தையும் கடந்தது. ஆனாலும் எந்தப் புலனையோ அல்லது புலன்களுக்கும் மேலான அறியும் ஆற்றலையோ விட எல்லையற்ற அதிக உண்மையானதும். திட்டவட்டமானதும் ஆனந்தமயமானதுமாகும்."




"அண்ட சராசரத்தைச் கட்டியாளும் அதே விதிகளின் இயக்கத்தை உங்களுடைய சொந்த உணர்வு நிலையில் ஊன்றிக் கவனிப்பதற்கு இறைவன் உங்களுக்கு சந்தர்ப்பத்தை

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்







## 115 பாகம்

### பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

வழங்கியுள்ளான். மூடிய கண்களுடன் உள்ள நிலையில் அனுபவிக்கும் உருவமற்ற உணர்வு நிலையை “இருளற்ற இருளும்” “ஒளியற்ற ஒளியும்” உள்ள எல்லையற்ற பிரதேசத்திற்கு ஒப்பிடலாம். அங்கு அவனுடைய சடப்படைப்பின் தனி அம்சங்களான வடிவங்கள், குணங்கள். இருமைகள் ஆகிய ஏதும் இல்லாது இறைவன் உள்ளான். படைப்பின் பின் உள்ள இந்த எல்லையற்ற சாசுவதப் பரப்பில் என்றும் உள்ளதான என்றும் விழிப்புள்ளதான, என்றும் புதிய ஆனந்தமான குணங்களற்ற உணர்வு நிலையில் இறைவன் மட்டுமே வசிக்கிறான். அவனுடைய உணர்வு நிலையில் அவன் தனி முதலாக ஆட்சி செலுத்தும் எல்லையற்ற அந்தப் பகுதியில் எந்த உலகமோ அல்லது மற்ற படைக்கப்பட்ட பொருளோ இல்லை. ஆனால் விண்வெளியின் மறுபுறத்தில் அவன் தன்னுள்ளேயே எல்லாவற்றையும் படைப்பு முழுவதையும் உணர்ந்துள்ளான்.”

மேலும் அவர் தொடர்கிறார்: “பிரபஞ் சத்தின் தொழிற்சாலை கண்ணிற்குப் புலப்படாதவனிடத்தில் உள்ளது. விண்வெளி சந்தேகத்திற்குரியதாகத் தோன்றுகிறது என ஐன்ஸ்டைன் கூறினார். ஏனெனில் அனைந்தும் அதிலிருந்து வெளிவந்து, அனைத்தும் அதனுள் மறைகின்றது. மின்னணுக்களும் முழு உலகங்களும் எங்குதான் மறைகின்றன? ஏதாவது ஒரு சடப்பொருளின் படைப்பைப்பற்றி நீங்கள் எப்பொழுது வசீகரிக்கப்பட்டாலும் கண்களை மூடி, அகத்துள் நோக்கி, அதன் மூலத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். நீங்கள் ஒன்றையும் காண்பதில்லை, ஒன்றையும் உணர்வதில்லை. இருப்பினும் கண்ணிற்குப் புலப்படும பொருட்கள் அனைத்தும், அந்த கண்ணிற்குப் புலப்படாதவனிடத்திலிருந்துதான் வந்துள்ளன. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கின்றது. அந்த இருளினுள் நீங்கள் தொடர்ந்து உற்று நோக்கிக் கொண்டிருந்தால், அப்பெரும் ஜோதியை நீங்கள் காண்பீர்கள். இருளின் பின்னால் உணர்வு நிலை (கூடஸ்தசைதன்யம்) உள்ளது. அந்த இருளின் பின்னால் உலகங்களின் அபரிமிதமாய் பெருகும் உயிர் வாழ்க்கை உள்ளது. விண்வெளியின் நேர் பின்னே அறிவுத் திறம் உள்ளது. அத்துடன் உங்களுக்கு நேர் பின்னே இறைவன் உள்ளான். அவனது இருப்பைப்பற்றிய அறியாமையில் இனி ஒருபோதும் வாழாதீர்கள். உங்களுடைய தியானத்தால் இருளைக் கடைந்தெடுங்கள். அவனைக் காணும்வரை நிறுத்தாதீர்கள். அறிந்துகொள்ளவேண்டிய எவ்வளவோ உள்ளது. அகத்துள் காணவேண்டியது எவ்வளவோ உள்ளது. உங்களுடைய ஒவ்வொரு பிரச்சனைக்கும் எல்லையற்ற பரம்பொருளிலிருந்து நேராகப் பதில் கிடைக்கும். விஞ்ஞானம் வேறு வழிகளால் கண்டுபிடிக்கும் உடற்கூறுவியல் விதிகளின் அடிப்படையை, தியானத்தின் மூலம் நான் அகத்துள் காணும் உண்மைகள் வெளிப்படுத்துக்கின்றன. நான் எனது கண்களை மூடியதும் எனது தேகத்தினுள் பாயும் நுட்பமான உயிரோட்டங்களை நான் காணமுடிகிறது.”

“உங்கள் கண்கள் மூடிய நிலையில் நீங்கள் அனுபவிக்கும் அமைதியில் நீங்கள் தனியாக இருப்பதாக உணராதீர்கள். இறைவன் உங்களுடன் உள்ளான். அவன் இல்லையென நீங்கள் ஏன் எண்ண வேண்டும்? ஆகாயமானது வானொலிப்பெட்டி மூலம் ஈர்க்கப்படும் இசையினால் எதைப்பற்றி நீங்கள் வேறு வழியில் தெரிந்துகொள்ள முடியாதோ அந்த இசையினால் நிரம்பியுள்ளது. இது இறைவனுக்கும் பொருந்தும். நீங்கள் உயிர்வாழும் ஒவ்வொரு நிமிடமும் அவன் உங்களுடன் உள்ளான். ஆயினும் அதை அறிவதற்கான ஒரே மார்க்கம் தியானம்

www.aanmeegamalar.com

ஆகும். அத்துடன் உங்களுள் தியானம் செய்வோர் மிகவும் ஆழமாகச் செல்ல வேண்டும்! உங்களுள் இறைவனின் இருப்பைப் பற்றிய ஏதாவது ஒரு அறிகுறியை நீங்கள் நிஜமாக உணரும் வரையில் இரவில் உறக்கத்தில் ஆழ்ந்து செல்லாதீர்கள். அந்த இருளின் அற்புதமான இரகசியங்களை கண்டுபிடிக்கும்வரையில் அதனுள் உற்று நோக்குங்கள்."

மேலும் குருதேவர் தன்னுடைய அனுபவத்தைக் கூறுகிறார்: "உங்களை உற்சாகப்படுத்துவதற்காக இன்று நான் உயர் உணர்வு நிலையில் இருந்தபோது பெற்ற அனுபவத்தைக் கூறுகிறேன். நான் மௌண்ட் வாஷிங்டனில் உள்ள நூலகத்தில் உட்கார்ந்திருந்தேன். அப்போது ஏறக்குறைய நான்கு மணி இருக்கும். திடீரென என் சுவாசம் மறைந்துவிட்டது. என் கைகால்கள் விறைத்துவிட்டன. மரணம் நடைபெறுவதை நானே பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். சுவாசமும் அசைவும் என் தேகத்தைவிட்டுச்சென்றுவிட்டன. ஆனாலும் நான் விழிப்பு நிலையில் இருந்தேன். மரணத்தின் இந்த அனுபவம் அற்புதமாக இருந்தது. நான் என் தேகத்தையும் இயற்கை முழுவதையும், இறைவனின் ஒளியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு பிரபஞ்ச திரைப்படமாகக் கண்டேன்.



குருப்ரியா

"இறைவா! மரணம் என ஒன்று இல்லை. இந்த முழு உலகும் ஒரு திரைப்படமே அல்லாது வேறொன்றுமில்லை!" என ஆனந்தத்துடன் கூறினேன்."

"அரியணையில் வீற்றிருக்கும் ஓர் அரசன், "ஆ நான் ஓர் அரசன்!" என சொல்லக்கூடும். ஆனால் மரணம் ஒரு முறை தட்டட்டும்; அவன் மறைந்து விடுகிறான். படைப்பிலுள்ள அனைத்து உருவங்களிலும் இறைவனை உணர்பவனே உண்மையான அரசன். மரணம் அவனை பயமுறுத்தாது; ஏனெனில் அதனை தெய்வீக ராஜ்யத்திற்குச் செல்லும் ஒரு நுழைவாசலாக அவன் காண்கிறான்," என்று அன்புமிக்க குருதேவர் உறுதிப்படுத்துகிறார்.

'விதியை வென்ற உழவன்' என்ற தலைப்பிலுள்ள ஒரு கதையை இக்கட்டுரையில் சேர்க்க நான் விரும்புகிறேன். முன்னொருகாலத்தில் அரசன் ஒருவன் வீரர்கள் சிலருடன் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றான். வழியில், ஒரு மரத்திலிருந்து பறவை இறக்கைகளை அடித்துக்கொண்டு ஏதோ கத்தியது. சகுனம் பார்ப்பதிலும் பறவைகளின் மொழி அறிவதிலும் தேர்ச்சிபெற்ற வீரன் ஒருவனை அழைத்தான். அரசன் "அந்தப் பறவை என்ன சொல்கிறது" என்று கேட்டான் "அரசே, பறவை நம்மைப்பற்றி ஒன்றும்



சொல்லவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் புல் வெட்டுவதற்காக உழவன் ஒருவன் வருவான். பாம்பு கடித்து அவன் இறந்துவிடுவான் என்று சொன்னது” என்றான் அந்த வீரன். அப்பொழுது கையில் அரிவாளுடன் அவ்வழியே சென்றான். பறவை சொன்னபடி நடக்கின்றதோ என்பதை அறிய ஆவல் கொண்ட அரசன் அங்கேயே தங்கியிருந்தான். மாலை நேரம் வந்தது. தலையில் புல்கட்டுடன் மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தான் அந்த உழவன். சகுனம் சொன்ன வீரனை அழைத்த அரசன், ‘‘நீ சொன்னது என்னவாயிற்று? இவனை பாம்பு கடிக்க மறந்து விட்டதா? இல்லை இவன்தான் எமனை ஏமாற்றிவிட்டானா? உன்னால் எனக்கு ஒருநாள் வீணாயிற்று. இவன் எப்படிச் சாவிலிருந்துத் தப்பித்தான் என்பதை விளக்க வேண்டும். இல்லையேல் நீ சாக வேண்டும்”. என்று கோபத்துடன் கத்தினான். அரசே, “அந்தப்பறவை சொன்னபடிதான் நடந்திருக்கவேண்டும். இடையில் என்ன நிகழ்ந்தது என்று புரியவில்லை” என்று சொன் னான் அவன். தலையில் புல்கட்டுட்ன் வந்த உழவன் அவர்கள் அருகில் வந்தான். அந்தப் புல்கட்டில் அரிவாள் சொருகப்பட்டிருந்தது. புல்கட்டைக் கீழே போடும்படி உழவனிடம் சொன்னான் அந்த வீரன். உழவனும் அப்படியே செய்தான். புல்கட்டு கீழே விழுந்தவுடன் அதைக் கட்டியிருந்த கயிறு அறுந்துவிட்டது. உள்ளே அரிவாளால் வெட்டப்பட்ட பாம்பு ஒன்று இறந்துகிடந்தது. இதைப்பார்த்து எல்லாரும் வியந்தனர்.

“அரசே, பாம்பு இவனை கொல்வதற்காக வந்திருக்கிறது. ஆனால் அது இறந்து விட்டது. எனக்குக் காரணம் தெரியவில்லை. எதற்கும் அந்த உழவனிடம் கேட்கிறேன்,” என்றான் வீரன். உழவனைப் பார்த்து அவன், “நீ புல்வெட்டச் சென்றதிலிருந்து ஏதேனும் குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சி நடந்ததா?” என்று கேட்டான். அதற்கு உழுவன், வழியில் ஒரு முதியவர் வந்தார். அவரை நான் வணங்கினேன். அவன் “நீடுழி வாழ்க” என்று வாழ்த்தினார். அதுதான் நடந்தது. வேறு ஒன்றும் இல்லை என்று கூறினான். அதை கேட்ட வீரன், “அரசே! இப்பொழுது உண்மை புரிந்துவிட்டது. அந்த முதியவரின் வாழ்த்துக்களால்தான் இவன் இன்று சாவிலிருந்து தப்பித்துக் கொண்டான். சான்றோர்களின் சொற்கள் பிரம்மன் எழுதிய தலை எழுத்தையும் மாற்ற வல்லவை” என்று விளக்கம் அளித்தான்.

பறவைகளின் பேச்சு பெரும்பாரலும் உண்மையாகத்தான் இருக்கும். இந்தக் கதை ஒரு நல்ல தத்துவத்தை விளக்குகிறது. முதியோரின் ஆசி அவனுடைய தலையெழுத் தையே மாற்றிவிட்டது. அவ்வாறிருக்கையில் கண்ணிற்குப் புலப்படும் உலகங்களை படைத்தவன் யார்? உலகங்கள் கண்ணிற்குப் புலப்படுகிறது. ஆனால் அவற்றைப் படைத்தவனைக் கண்ணிற்குப் புலப்படவில்லை. “மூடிய கண்களுக்குப் பின்னே உள்ள இருளை ஊடுருவினால் எதிலிருந்து அனைத்துப் படைப்பும் வெளிப்படுகிறதோ அந்தப் பேரொளியைக் காண்பீர்கள்”. அதை ஆழ்ந்த சமாதி மூலம் அறிய முடியும் என்று குருதேவர் அருளுகிறார். சாதாரண ஒரு முதியவரின் ஆசியால் ஒரு உழவன் சாவிலிருந்து தப்பித்துக் கொண்டார் என்று கூறும்பொழுது இறைவனை நினைத்து தினந்தோறும் தியானம் செய்து அவனை நேசித்து அவனை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவனுக்காக வாழ்ந்து கொள்கின்றவர்களை, இறைவனாகின்ற, பேரொளியாகின்ற, பேரானந்தமாகின்ற தந்தை எத்தனை முறை சாவிலிருந்து தப்பிக்கவைத்து எத்தனை கர்மாக்களிலிருந்து காப்பாற்ற முன் வருகிறார். நம்மை யாராவது அழிக்க நினைத்தால்கூட அவ்வாறு நினைப்பவர்கள் அழிந்து விடுவார்கள் என்பதுதான் இக்கதை விளக்குகிறது. அனைத்திற்கும் மேலே இறைவன் என்கின்ற மகாசக்தியாகின்ற அவனை நாடுகின்ற வர்களை காத்துக்கொள்ளும்போது வேறு எந்த பயமும் அவனை நாடுபவர்களுக்கு இருக்கவாய்ப்பே இல்லை என்பது உறுதியாகிறது.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



# கிரக தோஷத்தை தீர்க்கும் கோளறு பதிகம்

- ❖ நவகிரஹங்களால் உண்டாகும் துன்பங்களை நீக்கவும், ஆயுள் பலம் பெறவும் பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம். கோளறு பதிகம் பாடல் வரிகள், வரலாறு, மற்றும் பாடலின் பொருள் மற்றும் கோளறு பதிகம் .
- ❖ பன்னிரு சைவத் திருமுறைகளில் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பாடல்கள் முதல் இரண்டாம் மற்றும் மூன்றாம் திருமுறைகளாக உள்ளன. இவற்றுள் இரண்டாம் திருமுறையில் உள்ள பதிகங்களில் ஒன்று கோளறு பதிகம் என்று அழைக்கப்படுகிறது.
- ❖ திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகம் பாடல்கள் மற்றும் ஒவ்வொரு பாடலின் பொருளும் இந்த பதிவில் உள்ளதுஞ்.
- ❖ இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை சனிப் பெயர்ச்சி நடந்தேறும். சனி கிரகத்தின் அதிதேவதை ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு மாறுவதை பெயர்ச்சி என்று சோதிட சாத்திரங்கள் குறிக்கிறது. ராசிகள் மொத்தம் 12.
- ❖ கோடிப் பிறவிகளில் ஒரு ஆன்மா சேர்த்து வந்துள்ள நல்வினை; தீவினைக் குவியல் ‘சஞ்சித வினை’ என்று அழைக்கப் பெறும். அக்குவியலில் இருந்து ஒரு சிறு பகுதியை அனுபவித்து முடிக்க ஒரு ஆன்மா பிறவி எடுக்கிறது. இது ‘பிராரப்த வினை’.
- ❖ கிரகங்கள் துன்பங்களையோ இன்பங்களையோ புதிதாக உற்பத்தி செய்து வழங்குவதில்லை. துன்பமோ இன்பமோ பிராரப்த வினையின் பலனாகவே ஒவ்வொரு ஆன்மாவையும் வந்து எய்தும்.
- ❖ ஒரு கிரகம் சாதகமான இடத்தில் பெயர்ச்சியுற்றால் பிராரப்த வினையில் உள்ள நல்வினைப் பலன்கள் மிகுதியாகவும், பாதகமான இடத்தில் பெயர்ந்தால் அதே பிராரப்தத்தின் தீவினைப் பலன்கள் மிகுதியாகவும் அந்தந்த ராசியினரை வந்துச் சேரும்.
- ❖ கிரகங்கள் ஒவ்வொருவரின் வினைகளையும் உரிய நேரத்தில் சேர்ப்பிக்கும் அஞ்சல் நிலைய அதிகாரிகள் (Post Masters). நம் தீவினைகளே நமக்கு துன்பத்தை ஊட்டுகின்றன; கிரகங்கள் அல்ல என்ற புரிதல் மிக மிக அவசியம்.
- ❖ ஞானசம்பந்தர் பரம கருணையோடு அருளியுள்ள சக்தி வாய்ந்த கோளறு பதிகத்தை அனுதினமும் பாராயணம் புரிவதன் மூலம் கர்ம வினையின் வேகத்தை சர்வ நிச்சயமாய் குறைத்துக் கொள்ள முடியும்.
- ❖ கிரக வழிபாட்டை தவிர்த்து இஷ்ட தெய்வத்தின் கருணையை மட்டுமே வேண்டுவோம். கிரகங்களுக்கு திருவிளக்கு ஏற்றுவதை விடுத்து தெய்வத்தின் பொருட்டு திருவிளக்கு ஏற்றுவோம். விதவிதமான கற்களை அணிவதால் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. நற்கருமங்களை மிகுதியாகப் புரிவதும் இறை வழிபாடும் மட்டுமே சிறந்த பரிகாரம்.

கோளாறு பதிகம் திருஞானசம்பந்தர் அருளியது இந்தப் பதிகங்களை தொடர்ந்து படித்தாலே பல்வேறு கிரக தோஷங்கள் நீங்கும், வீடுகளில் காலை அல்லது மாலை கோளாறு பதிக பாடல்களை பாடினாலோ கேட்டாலோ தீய சக்திகளின் வீரியம் குறையும்.



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க aanmeegamalar.com இணையதளத்தை பார்க்கவும்





















# திரிசூல வழிபாடு

சிவபெருமானுக்குரிய படைக்கலங்களுள் முதன்மை பெற்றது சூலமாகும். அது தலைப் பகுதியில் மூன்று கூர்மையான பகுதிகளைக் கொண்டிருப்பதால் முத்தலைச் சூலம் என்றும் திரிசூலம் என்றும் அழைக்கப்படுகின்றது.

சூலத்தை ஏந்தி நின்று அருள்புரிவதால் சிவ பெருமான் சூலபாணி என்றும், சூலதரர் என்றும் அழைக்கப்படுகிறார். திரிசூலம், உயிர்களைப் பற்றியுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை நீக்கி அவற்றிற்கு மோட்சத்தை அருள்கிறது. அது ஞானத்தை வழங்குவதாகவும் உள்ளது. அஸ்திரங்களுக்கு எல்லாம் தலைவனாக இருப்பதால் அதனை அஸ்திர ராஜன் எனவும் அழைப்பர்.

பகைவர்களை வென்று சுகமாக வாழவும், ஞானத்தினைப் பெற்று மகிழ்ச்சியாக வாழவும், திரிசூலத்தைச் சிவ பெருமானாகவே போற்றி வழி படுகின்றனர். இந்த விரதத்தால் மனதில் மகிழ்ச்சி உண்டாகும். கண்ணுக்குப் புலனாகாத பகை விலகும். பொன்னால் திரிசூலத்தைச் செய்து, அதைச் சுற்றிலும் எட்டுத் திசைகளிலும் அஷ்டாயுதங்களை நிலைப் படுத்தி அஸ்திர பூஜை செய் வர். அத்தி மரத்தாலும், கருங்காலி மரத்தாலும் சூலங்களைச் செய்து வழிபடுகின்றனர்.

சூலத்தின் மையத்தில் மூன்று கிளைகளில் சிவபெரு மானையும் இடது கிளையில் திருமாலையும்வலது கிளையில் பிரம்ம தேவனையும், மூன்றும் கூடுமிடத்தில் விநாயகர், முருகன், வீரபத்திரர், சாத்தன் ஆகியோரையும் அதன் கீழுள்ள கண்டத்தில் ஏகாதச ருத்திரர்களையும், அதன் கீழுள்ள பத்மத் தில் அஷ்டமாத்ருகா, அஷ்டலட்சுமிகள் ஆகியோரையும் பூஜிக்கின்றனர்.



திரிசூல வழிபாடு இல்லறத்தாருக்குப் பாதுகாப்பையும் செல்வத்தையும் அருள்கின்றது. அழிவிலிருந்து காப்பாற்றுகிறது. காசி நகருக்கு அவிமுத்தம் என்று பெயர் வழங்குகிறது. இதற்கு அழிவற்றது என்பது பொருள். இந்த தலத்தைத் திரிசூலம் தாங்கிக் கொண்டிருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

சூலாயுதத்தைத் தனியாக வழிபடுவதற்குப் பதில் சந்திரசேகரர் திருவுருவத்தில் சார்த்தி வைத்து வழிபடுவதும் உண்டு. திரிசூல விரதத்தை விரத மகாத்மியம் சிறப்புடன் விளக்குகிறது.

சிவாலயங்களில் இவரை முதன்மை மூர்த்தி யாகக் கொள்வர். கொடியேற்றம், கொடியிறக்கம் இவர் முன்பாகவே நடைபெறும். தீர்த்தவாரியில் நீருள் மூழ்கித் தீர்த்தம் அளிப்பவரும் இவரே.

தினமும் ஸ்ரீபலி நாயகரைக்கொண்டு செய்யப்படும் ஸ்ரீபலி உற்சவம் பெருந்திருவிழாக் களில் சூலதேவரை வைத்துக் கொண்டே செய்யப்படுகின்றது. பெருந்திருவிழாவில் சுவாமி புறப்பாட்டிற்கு முன்பாகத் திரிசூலம் எடுத்துச் செல்லப் படுகின்றது. இதனைப் படை வலம் செய்தல்என்பர்.

திரிசூலத்தைச்சிவபெரு மானாகவே போற்றுகின்றனர்.

சில ஆலயங்களில் திரிசூலத்தின் முன்புறம் உமாமகேஸ்வரர் அர்த்த நாரீஸ்வரர், ரிஷ பாரூடர் வடிவங்கள் அமைக் கப்பட் டுள்ளன.

கிராமிய தெய்வமான பிடாரி ஆலயங்களிலும் திரி சூலமே படைக்கலமாக உள்ளது.

அதன் நடுவில் காளியின் உருவம் அமைக் கப்படுகின்றது. திரிசூலத்தை மிகப் பழங்காலந்தொட்டே காவலின் சின்னமாக போற்றி வருகின்றனர்.

# மோகினி அவதாரமும், மோகினியின் கோவில்களும்

'மோகினி' என்பதற்கு மோகனத்தினால் பிறரை மயக்கக்கூடியவள் என்று பொருள். மயக்கும் மாயதோற்றம் அல்லது கவர்ந்திழுக்கக்கூடிய பெண்மை அழகின் சாராம்சம் என்ற பொருள் பொதித்த பெயரே மோகினி ஆகும்.

சமஸ்கிருத மொழியில் மோகினி என்பதற்கு வசீகரிப்பவள் என்பதே அர்த்தம். தேவர்கள், மரணம் இல்லாத தன்மையை பெறுவதற்காக அமுதத்தை பெற விரும்புகின்றனர். அதற்காக பாற்கடலை கடைகின்றனர். அப்போது அசுரர்கள் அதை பறித்துக் கொள்கின்றனர்.

அசுரர்களை மயக்கி அமுதகலசத்தை அவர்களிடமிருந்து பெறும்படியாக திருமால் எடுத்த அழகிய பெண் அவதாரமே மோகினி. மகாபாரதத் தின் மூலப்படியில் இப்படி கூறப்பட்டிருக்கிறது. மேலும், திருமாலின் மாய தோற்றமே மோகினி என்று கூறப்படுகிறது.

மோகினி கதையானது பரவலாக அறியப்பட்டதும் அது மீண்டும் மீண்டும் விரிவாக கூறவும் எழுதவும் பட்டது. பத்தாம் நூற்றாண்டில் பாகவத புராணத்தில் திருமாலாகிய விஷ்ணுவின் முறைப்படியான அவதாரமாக மோகினி அவதாரம் விரிவாக கூறப்பட்டுள்ளது.

திருமால் அசுரர்களை மாயமான தமது மோகினி தோற்றத்தால் ஏமாற்றிய பிறகு சிவபெருமான் மோகினியை சந்திக்க விரும்பியதாக பாகவத புராணம் கூறுகிறது. தேவர்கள் அனைவரும் மோகினியின் அழகை வியந்து திருமாலின் பெருமையை பேசக்கேட்ட சிவன், தமது மனைவி பார்வதி தேவியுடன் திருமாலை சந்திக்கச் செல்கிறார்.

நாரதமுனிவர், அசுரர்களைஏமாற்றிய திருமாலின் மோகினி அவதாரத்தை பற்றி கூறியபோது சிவன் அவரை மணந்ததாக பிரமந்த புராணம் கூறுகிறது. மோகினியின் தோற்றம் பஸ்மாசுரனை மயக்குவதற்கான தோற்றமே மோகினியே தவிர பெண்ணாக மாற்றம் நிகழவில்லை என்று புட்டநாயக் போன்ற புராண வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

மோகினி ஆலயங்கள் ஆந்திர பிரதேசத்தில் கிழக்கு கோதாவரி மாநிலம் ரயாலியில் ஜகன் மோகினி கேசவ சுவாமி ஆலயம் உள்ளது. மஹாராஷ்டிர மாநிலம் நேவசாவில் மகாசாலை ஒன்று உள்ளது. குருவாயூர் அருகே மோகினிக்காக பெயரிடப்பட்ட பழமையான ஹரிகன்யவா ஆலயம் உள்ளது. இதேபோன்று மோகினி தேவியை பல்வேறு ஆலயங்களில் பூஜித்து வருகின்றனர்.



# காலத்தைக் கருத்தோடு பயன்படுத்தவேண்டும்

**'தாங்கள் புத்தனின் ஆதரவாளரா? அல்லது புத்தமதத்தின் ஆதரவாளரா? இன்று நீங்கள் ஒரு இந்துதானே அதனால் நேர்மையாக விளக்குங்கள்'.**

நான் இப்பெரிய உலகில் என்னைப் பற்றி சொல்லி கொள்ளும்போது ஆணவமில்லாத நான் ஒரு எளிமைான இந்து. புத்தி மதங்களுக்கெல்லாம் அவசியமானது. அதனால் எவராலும் புத்தியையும் அதனுடைய சிந்தனை ஆட்சியையும் மறுக்க முடிவதில்லை. எவ்வாதத்தையும் சொல்லி புத்தியை முற்றிலும் மறுத்தால் தான் புத்தமதத்தை மறுக்க முடியும். சிந்தனைக்குள் இது ஒரு விவகாரம்.

❖❖❖

**புத்திக்குள் விவகாரம் என்று தாங்கள் எதைக் கருதி சொல்லுகிறீர்கள்? எதைக் கருதுகிறீர்கள்?**

ஒரு எழுத்திலோ பேச்சிலோ உவமான உவமேயங்களைக் காட்டி பெரிய கருத்தை விளக்கும்பொழுது பல சிறப்பான சொற்களை சொல்ல வேண்டி வரும். உடனே அந்த சொல்லை மட்டும் எடுத்துக்கொண்டு புத்தா என்று சொன்னதனால் நீங்கள் புத்திக்கு மட்டும் உடையவர் என்று சொல்லாதீர்கள். அனைவரும் புத்திக்கு உடையவர்களே. சொல்லை வைத்து மதத்தின் முத்திரையை என் மீது குத்தக்கூடாது. தயவுசெய்து புத்தரையும் புத்தமதத்தையும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். எனது பழக்கம் இப்படிப்பட்டதே.

❖❖❖

ஒருசமயம் சீக்கிரமாகவும் மற்றொரு சமயம் குறித்த நேரம் கடந்து வருவதும், நான் காலத்தைக் காப்பாற்றுகிறேன் என்ற கருத்தல்ல. காலத்தைக் கருத்தோடு உபயோகப்படுத்திக் கொள்ளுவதே அதைக் காப்பாற்றும் முறையாகும். ஒரு நிகழ்ச்சியின் ஆரம்பத்தை



நிலைநிறுத்துவதே காலம் என்றாலும் அது நிகழ்ச்சியை மட்டும் நிலைநிறுத்தவில்லை. மனிதனின் நினைவிற்கு காலத்தையும் நிலைநாட்டுகின்றது. உயிர்வாழ்க்கையும் அந்த வாழ்க்கைக்கு உரிய உபயோகத்தை செய்து முடிப்பதும் பெரிதல்ல. அதை முடிப்பதற்கு உள்ள காலம் என்பது கடவுளால் காலத்தினுள் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. அது நமது நினைவினுள் நிற்க வேண்டும். ஆகவே எச்சமயத்திலும் எனது வேலையைத் தொடங்கி செய்வது என்பது எனது நிரந்தர எண்ணமாகும். ஏனென்றால் எனது செயல்களில் எல்லாம் குறித்த காலங்கள் குறிக்கின்றன.

❖❖❖

ஒவ்வொரு மொழியிலும் அந்த மொழியின் ஒவ்வொரு வார்த்தையிலும் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பொருள்கள் இருக்கின்றன. ஒரு பொருள் சாதாரணமானதே மற்றொரு பொருள் உட்பொருளைக் கொண்டது. அதனுடைய ஆழமான விளக்கம் இப்பரந்த உலகமே.

❖❖❖

நான் சொற்களிலுள்ள உட்பொருளை மட்டுமே எடுத்துக் கொள்ளுகிறேன். மேலேழுந்த வாரியான நினைவு என்பதே எனக்குக் கிடையாது. அது எனக்கு பழக்கம் இல்லை. இதுபோல ஒரு குறித்த நேரத்திற்கு வருவது வேலை செய்வது என்பது எனது கொள்கை. அந்த குறித்த நேரத்திலும் மற்ற எல்லா நேரங்களிலும் நான் கடினமான உழைக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அதுவும் எப்படி தெரியுமா? வயல்வெளிகளில் வேலை செய்கின்ற தொழிலாளியை போன்று உழைக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அப்படி செய்தால் தான் நாம் நமது வாழ்நாட்கள் என்ற

காலத்திலுள்ள ஒவ்வொரு நொடியையும் கைகொள்ள முடியும். இப்படிப்பட்ட எனது செய்கையே நான் அடி எடுத்து வைத்த முதல் இராட்சஸ முயற்சி ஆகும். எனது முன்னேற்றத்தில் அடிச்சுவடு இதே.

❖❖❖

உங்களுக்கு உங்களது குறித்த காலம் தெரியுமா? உண்மை யாக குறித்த காலத்தில் உங்களது பணி தொடங்கி விட்டது என்று தெரியுமா? அல்லது இனிமேல் தான் துவங்கப் போகிறது என்பது தெரியுமா? தற்பொழுதும் நீங்கள் முன்னேற்றத்தில் தான் இருக்கிறீர்களா என்பது புலப்படுமா? இவைகளுக்கு நீங்கள் விளக்கமான பதிலும் அதன் தன்மையையும் குறித்தால் உலகம் உங்களை உண்மையாகவே புரிந்து கொண்டு உங்களுடைய தோற்றத் தின் உண்மையான காலத்தையும் உணர்ந்துவிடும் அல்லவா?

❖❖❖

என்னை நீங்கள் மன்னித்து விடுங்கள். நான் இன்னமும் அடர்ந்த காடு போன்ற சிந்தனை உலகத்தில் வழி தெரியாமல் துடித்துக் கொண்டிருக்கிறேன். இதனால் எனது உள் உள்ளத்தில் எந்தவித துக்கமும் இல்லை. இனியும் நான் எனது சரியான குறித்த காலத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். இங்குதான் எனது துக்கமான வாழ்க்கை ஆரம்பமாகிறது.

❖❖❖

மேற்சொன்னபடி துக்கமான நினைவு தான் உங்களது முழு அறிவு என்றால், அதுதான் மனிதனுடையது என்று சொன்னாலும் நான் எப்படி நினைத்துக் கொள்வது? நீங்களும் சிற்சில மனிதர்களும் இத்தகைய துக்கமான முழுஅறிவில் உங்களது வாழ்வின் தோற்றத்தையும் குறித்த காலம் உழைப்பு இவைகளையும் எப்படித் தெரிந்து கொள்வீர்கள்? இப்புத்தகத்தைப் படிக்கின்ற மெய்யன்பரே கேளுங்கள். எனக்கு வாழ்க்கையில் நிரந்தரமான குரு கிடைத்ததே இல்லை. மேலும் நானே எனக்கென்று எனது முழு அறிவை வெளிப்படுத்த ஒரு அற்புதமான வடிவ அமைப்பையும் நான் கொள்ளவே இல்லை. இவைகள் எதிலுமே நிச்சயம் இல்லையே. நான் என்ன செய்வது? இதுதான் என்னுடைய இதயம் பற்றி எரிகின்ற உண்மை விளக்கம் ஆகும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203



# பராசக்தி சிவபூஜை செய்து சிவனருள் பெற்ற கோவில்கள்

1. கும்ப கோணம் அருகே திருச் சத்தி முற்றம் சிவக்கொழுந்தீசர் கோயில். அம்பாள் தவமும் பூசையும் செய்த தலம். ஈசன் நெருப்பாகத் தோன்றிய போது பரஞ்சோதிப் பெருமான் என்று அறியாமல் நெருப்பு என்று அஞ்சி ஓடி லிங்கப் பரம்பொருளைத் தழுவிக் கொண்டாள். ஈசனுக்கு சுடர்க் கொழுந்து ஈசர் என்று அருள் நாமம்.
2. கும்பகோணம் அருகே திருந்து தேவன் குடி கற்கடகேசுவரர் கோயில். நண்டான பரா சக்தி இங்கு சிவபூசை செய்து மீண்டும் தேவியானாள் .
3. தஞ்சாவூர் அருகே சக்கரப்பள்ளி சக்கர வாகேஸ்வரர் கோயில். சக்கர வாகப் பறவையான பரா சக்தி சிவ பூஜை செய்து மீண்டும் தேவியானாள்.
4. விழுப்புரம் அருகே பனையபுரம் (திருப்புற வார் பனங்காட்டூர்) பனங்காட்டீசர் கோயில். புறாவான பரா சக்தி சிவ பூஜை செய்து மீண்டும் தேவியான தலம்.

❖ மயிலாடுதுறை கும்ப கோணம் அருகே, திருவாவடுதுறை மாசிலா மணீசர் கோயில் (கோமுத்தீசுவரர்). பசுவான பரா சக்தி இங்கு லிங்கப் பரம்பொருளின் மேல் பால் சொரிந்து வழிபட்டுப் பூஜித்து ஈசனருளால் மீண்டும் தெய்வம் ஆனாள்.

❖ மயிலாடுதுறை மயூர நாதர் கோயில், சென்னை மயிலாபுரி (மயிலாப்பூர்) கபாலீசுவரர் கோயில். பரா சக்தி மயிலாக வந்து மயூர லிங்கப் பரம்பொருளையும் கபாலி லிங்கத்தையும் பூஜித்து மீண்டும் தேவியானாள். ஆலகால விஷம் வெள்ளம் நெருப்பு யானை ராவணன் மற்றும் பலவற்றால் அச்சம் கொண்டு பயந்து ஓடி அருள் பெறும் பக்தையான மயிலம்மைக்கு அபயாம்பிகை கற்பகாம்பாள் என்பவை பிற்காலத்தவர் தற்காலத்தவர் வழங்கிய கற்பனைப் பெயர்கள்.திருகற்குடி, திருக்கடிக் குளம், திருக்கஞ்சனூர் ஆகிய மூன்று தலங்களிலும் இல்லை யென்னாது எல்லாம் அருளும் *ஈசனுக்குக் கற்பகம் என்று பெயர். கற்பகாம்பிகை என்பது தாயுமான ஈசன் மாதேஸ்வரன் சிவ நாமம்

❖ விருத்தாச்சலம் விருத்த கிரீசர் கோயில்.



விஷம் நீல மணி போல் இருந்த விஷா பரண மூர்த்தியின் மணிகண்டத்தைத் தீண்டியதால் அழகு இழந்து முதுமை அடைந்த உமையவள் ஊழி வெள்ளத்தில் முழுகி மேல் எழுந்த முதுகுன்றம் விருத்த கிரீசரை வழிபட்டு மீண்டும் இளமை பெற் றாள். விருத்தாம்பிகை பாலாம்பிகை என்ற அம்பாள் பெயர்கள் தல வரலாற்றைக் காட்டுகின்றன.

❖ கும்ப கோணம் அருகே திருநீலக் குடி நீல கண்டர் கோயில் . கடலில் இருந்த ஆலகால விஷத்தின் காற்றினால் பாதிக்கப்பட்டு உடல் முழுவதும் கருமையான உமை நீலக் குடி சிவ பரம்பொருளைப் பூசித்து நலம் அடைந் தாள். பாதிக்கப்பட்ட உமை சந்நிதி, நலம் அடைந்த உமை சந்நிதி என்று இரண்டு சந்நிதிகள் உள்ளன.

❖ ஆந்திரம், விஜய வாடா அருகே சிரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயில். மலைவாழ் ஜாதி வேடுவப் பெண்ணாக இருந்தபார்வதி இங்கு மல்லிகார்ஜுனரைப் பூசித்துமீண்டும் தேவியானாள். வண்டான பிருங்கிமுனிவ ருக்கு சாபம் கொடுத்த பாவத்தால் வேடுவப் பெண்ணாகி சிவனருளால் மீண்டும் தேவியானதால் பிரமராம்பிகை அதாவது வண்டம்மை என்று பெயர்.

❖ காரைக்கால் பெருவண்டி நிலையம் அருகே திருத்தெளிச் சேரி பார்வதீசுவரர் கோயில். பார்வதி சிவ பூசை செய்து கங்கை நீர் தெளிக்கப் பெற்றுத் தூய்மையானாள்.

❖ திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயில். மிக அரிய வெள்ளை நாக மரத்தடியில் வெளிப் பட்டிருந்த செழு நீர்த் திரளான தண்ணீர் லிங்கத்தை ஜம்பு லிங்கத்தை யானையும் சிலந்தியும் வழிபட்டு முக்தி அடைந்த பின்னர் அம்பாள் தினமும் பூசை செய்யும் கோயில். காஞ்சிபுரம் திரு வானைக்கா ஆகிய இரண்டு தலங்களும் அம்பாள் நித்திய சிவ பூசை செய்த கோயில்கள்.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# உடல் உறுப்புகளும் பலப்படுத்தும் உணவுகளும்

## மூளை:

கறிவேப்பிலைத் துவையலை 48 நாள்கள் சாப்பிட்டு வந்தால் மூளையின் செயல்பாடு சீராகி, நாம் சுறுசுறுப்புடன் இருப்போம்.

குறைந்தது ஆண்டுக்கு இருமுறையாவது கைகளில் மருதாணி வைத்தால், மனம் தொடர்பான கோளாறுகள் நீங்கும். அதன் குளிர்ச்சி மூளைக்கு ஓய்வைத் தரும்.

வல்லாரை இலைகளை நெய்யில் வதக்கி சுடு சாதத்துடன் இரண்டு கவளம் சாப்பிட்டு வர வேண்டும்.

தினசரி இரண்டு துண்டு தேங்காயை மென்று தின்பதால் மூளையில் எந்தப் புண்களும் வராது.

## கண்கள்:

பாலுடன் குங்குமப்பூ சேர்த்துக் குடித்து வருவது நல்லது.

தினமும் 50 கிராம் அளவுக்கு மாம்பழம் அல்லது பப்பாளியைச் சாப்பிட்டு வர பார்வைத்திறன் மேம்படும்.




அரைக்கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் கண்கள் குளிர்ச்சியடையும். அதுபோல் பொன்னாங்கண்ணி, முருங்கைக் கீரைக் சாப்பிட்டாலும் பார்வைத்திறன் மேம்படும்.

வெண்டைக்காய் மோர்க்குழம்பு, வெண்டை மசாலா, வெண்டைக்காய் பொரியல் என சாப்பிட கண்களுக்கு நல்லது.

தினந்தோறும் நெல்லிக்காய் ஜூஸ் குடித்து வந்தால், கண் தொடர்பான பிரச்சனைகள் வராது.



## பற்கள்:

மாவிலைப் பொடியை பற்பொடியாகப் பயன்படுத்தி பல் தேய்த்து வந்தால் பற்கள் உறுதியாகும்.

கோவைப்பழம் சாப்பிட்டால் பல்தொந்தரவுகள் வராது. உணவிலும் அடிக்கடி கோவைக்காயைச் சேர்த்துக் கொள்ளலாம்.

செவ்வாழைப் பழத்தை தினமும் இரவில் சாப்பிட்டு வர பல்லில் ரத்தக்கசிவு, பல் சொத்தை ஆகியவை வராது.

பல் உறுதியாக, உணவை நன்றாக மென்று சுவைக்க வேண்டும். கேரட், கரும்பு,



ஆப் பிள் போன்றவற்றைப் பத்து முறையாவது நன்றாக மென்று சாப்பிட வேண்டும்.

## நரம்புகள்:

சேப்பங்கிழங்கைஅடிக்கடி உணவில் சேர்த்துக்கொண் டால் நரம்புகள் பலம் பெறும்.

இரண்டு அத்திப்பழத்தை தினந்தோறும் சாப் பிட்டு வரலாம்.

மாதுளைப் பழச்சாற்றில் தேன் கலந்து 48 நாள்கள் குடித்து வரலாம்.

இலந்தைப் பழத்தை அவ்வப்போது சுவைத்து வரலாம்.

கரிசலாங்கண்ணிக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது.

## ரத்தம்:

வாரம் இரண்டு நாள்கள் பீட்ரூட் ஜூஸ் குடிப்ப தால் ரத்தம் உற்பத்தியாகும்.

திராட்சைப் பழ ஜூஸ் ஒரு டம்ளர் அல்லது ஒரு ஸ்பூன் இஞ்சிச் சாற்றில் சிறிது தேன் கலந்து குடித்து வந்தால் ரத்தம் சுத்திகரிக்கப்படும்.

தினம் ஒரு கப் அளவுக்கு தயிர் சாப்பிட்டு வந்தால், ரத்தக் குழாய் அடைப்புகள் நீங்கும்.

அடிக்கடி விளாம்பழம் சாப்பிட்டு வந்தால், ரத்தத்தில் உள்ள கிருமிகள் அழியும்.

இரண்டு லிட்டர் நீரைக் கொதிக்க வைத்து, அதில் சீரகத்தைப் போட்டு 10 மணி நேரம் கழித்து, அந்தத் தண்ணீரை நாள் முழுவதும் குடித்து வந்தால் ரத்தம் சுத்தமாகும்.

## சருமம்:

தேகம் பளபளப்பாக மாற ஆவாரம் பூ டீ குடித்து வரலாம். ஆரஞ்சுப் பழத்தையும் சாப்பிட்டு வரலாம்.

முட்டைக்கோஸ் சாற்றை முகத்தில் தடவி வர முகத்தில் ஏற்படும் சுருக்கங்கள் மறையும்.

சந்தனக் கட்டையை இழைத்து அதனுடன் எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசினால் பருக்கள் நீங்கும். முகம் பிரகாசமாகும்.

ஆரோக்கியமான உடல், பொலிவான முகம், பளபளப்பான சருமம் பெற அறுகம்புல்லை நீர் விட்டு அரைத்து, வெல்லம் சேர்த்து வாரம் மூன்று முறைக் குடித்து வரவேண்டும்.

## நுரையீரல் – இதயம்:

தேனில் ஊறவைத்த நெல்லிக் காயை தினசரி சாப்பிட்டு வர நுரையீரல், இதயம் பலமாகும்.

கரிசலாங்கண்ணிக் கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் நல்லது.

ஆர்கானிக் ரோஜாப்பூ, பனங்கற்கண்டு, தேன் ஆகியவற்றை லேகியம் போல கலந்து, தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டு வர இதயம் பலமாகும்.

இஞ்சி முரப்பா, இஞ்சி சாறு, இஞ்சித் துவையல் ஆகியவற்றைச் சாப்பிட்டால் இதயம் ஆரோக்கியமாக துடித்துக் கொண்டிருக்கும்.

சுண்டை வற்றலை உணவில் அடிக்கடி சேர்த் துக்கொண்டால் நுரையீரல் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

திராட்சை ஜூஸ், உலர் திராட்சையை சாப்பிட இதயம் பலம் பெறும்.

முள்ளங்கிச் சாற்றை அரை கப் அளவுக்கு மூன்று வாரங்களுக்கு குடித்து வருவது நல்லது. இதனால், நுரையீரல் தொடர்பான பிரச்னைகள்

நெருங்காது.

ஆளிவிதைகள், பாதாம், வால்நட் ஆகிய வற்றில் ஒமேகா 3, நல்ல கொழுப்பு இருப்பதால் இதயத்துக்கு நல்லது.

## வயிறு:

காலையில் எழுந்ததும் ஊறவைத்த ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை சாப்பிட்டு சிறிதளவு தயிரையும் குடிக்க வேண்டும். வயிறு சுத்தமாகும்.

மாதுளம்பூவை தேநீராக்கிக் குடித்து வந்தால், வயிறு தொடர்பான பிரச்னைகள் நீங்கும்.

வறுத்துப் பொடித்த சீரகத்தை ஒரு டம்ளர் மோரில் போட்டுக் குடிக்க வேண்டும்.

வாரத்தில் இரண்டு நாள்கள் ஒரு டம்ளர் தேங்காய்ப்பாலுடன் கருப்பட்டி சேர்த்துக் குடித்து வருவதால், வயிறு தொடர்பான பிரச்னைகள் எதுவும் வராது.

சுரைக்காயை வாரம் இருமுறை உணவில் சேர்த்துக்கொள்ள தொப்பை கரையும்.

வாழைப்பூ, மணத்தக்காளிக் கீரையை வாரம் ஒருமுறையாவது சாப்பிடவயிற்றுத்தொந்தரவுகள் நீங்கும்.

வாரம் ஒருமுறை கொள்ளு ரசம் சாப்பிடக் கெட்டக் கொழுப்பு கரையும். தொப்பையும் குறையும்

## கல்லீரல் – மண்ணீரல்:

கரிசலாங்கண்ணிக் கீரையைக் கூட்டாக செய்துச் சாப்பிடலாம். கீழா நெல்லியை புளியங்கொட்டை அளவு வெறும் வயிற்றில் மாதந்தோறும் ஐந்து நாளைக்குச் சாப்பிட வேண்டும்.

மாதத்தில் இரண்டு நாள்கள் வேப்பம்பூ ரசம் வைத்துச் சாப்பிடுங்கள்.

திராட்சை பழச்சாற்றை அருந்தி வந்தால் கல்லீரல், மண்ணீரல் உறுப்புகளுக்கு நன்மையைச் செய்யும்.

## மலக்குடல்


அகத்திக்கீரையை வாரம் ஒருநாள் சமைத்துச் சாப்பிட வேண்டும். இதனால், மலக்குடல் சுத்த மாக இருக்கும்.

பப்பாளிப் பழத்தை வாரம் மூன்றுமுறை சாப்பிடுவது நல்லது.

அடிக்கடி முளைக்கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வரலாம்.

மாலை ஆறு மணி அளவில், மாம்பழ சீசனில் மாம்பழத்தைத் தொடர்ந்து சுவைத்து வரலாம்.

மாதுளைப்பூ சாறு 15 மி.லி, சிறிதளவு பனங் கற்கண்டு சேர்த்து மூன்று வேளையும் குடித்து வரவேண்டும்.



## பாதம்:

விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் சம அளவு எடுத்து பாதத்தில் தடவி வந்தால் பாதம் மிருதுவாக இருக்கும். லேசாக சூடு செய்த வேப்பெண்ணெயை விரல்களின் இடுக்கில் தடவினால் சேற்றுப் புண்கள் சரியாகும்.

வாழைப்பூவை பருப்பு சேர்த்துச் சமைத்து சாப்பிட்டு வந்தால், கை, கால்களில் வரும் எரிச்சல் நீங்கும்.

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம்,

கீதாசமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்




ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்

பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்

YouTube LIKE & SHARE

# நவராத்திரியில் அம்மனை வழிபடும் முறை

1. பிரதமை புரட்டாசியில் வரும் மகாளயபட்ச அமாவாசைக்கு அடுத்த நாளாகிய பிரதமை திதியிலிருந்து துவங்கி நவமி வரையாகிய ஒன்பது நாட்களும் பல்வேறு ரூபங்களில் அம்பிகை நமக்கு அருள்பாலிக்கிறாள். நவராத்திரியின் முதல் நாள் தேவியான மகேஸ்வரி பாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி. இன்றைய தினம் அவளை மல்லிகை, வில்வம் கொண்டு அலங்கரிக்கவேண்டும். வெண் பொங்கல் நைவேத்தியம் செய்யலாம்.

2. துவிதியை இரண்டாம் நாள் வழிபடப்படும் கவுமாரி தேவியாக போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள். முல்லை, துளசியால் அலங்காரம் செய்து புளியோதரை நிவேதனம் பண்ண வேண்டும்.

3. திரிதியை மூன்றாவது நாளுக்கு உரிய வாராகி அன்னை, கன்யா கல்யாணி என்று அழைக்கப்படுகிறாள். செண்பகம் மற்றும் சம்பங்கிகள் இவளுக்கு உகந்தவை. சர்க்கரை பொங்கல் படைத்து வழிபட வேண்டும்.

4. சதுர்த்தி நான்காம் நாளில் அருள்பவள் மகாலட்சுமி. இவள் ரோகிணி என்று அழைக் கப்படுகிறாள். மல்லிகை பூக்களால் அலங்காரம் செய்து, அன்னம் நைவேத்தியம் செய்து வழிபட வேண்டும்.

5. பஞ்சமி ஐந்தாம் நாள் வைஷ்ணவியாகவும் மோகினியாகவும் அலங்கரிப்பர். முல்லைப்பூ அலங்காரமும் தயிர் சாதமும் இவளுக்கு ஏற் றவை.

6. சஷ்டி ஆறாவது நாளுக்குரிய தேவி வடி வம் இந்திராணி. அன்று சர்ப ராஜ ஆசனத்தில் தேவி அமர்ந்திருக்கும் கோலத்தில் பூஜை செய் வது வழக்கம். தேவிக்கு ஜாதி மலரே உகந்தது. இவள் விரும்புவது தேங்காய் சாதம்.

7. சப்தமி ஏழாம் நாள், தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக்கப்படுகிறாள். இந்த அன்னைக்கு தாழம்பூ சூடி, தும்பை இலைகளால் அர்ச்சனை செய்ய வேண்டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபடலாம்.

8. அஷ்டமி எட்டாவது நாள் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது. அன்று அன்னை அன்பே உருவாக அருள்பாலிக்கிறாள். இவளுக்கு உகந்த ரோஜா மலரை சூடி, சர்க்கரை பொங்கல் படையல் இட்டு வழிபடலாம்.

9. நவமி ஒன்பதாம் நாள் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்த லலிதா பரமேஸ்வரியாக அன்னையை வழிபடுவது வழக்கம். இன்றைய தினம் பால் பாயாசம் நைவேத்தியம் செய்து வழிபடலாம். தாமரை மலர்களால் அலங்கரித்து

10. பத்தாவது நாள் விஜயதசமி. விஜயம் என்றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம்வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண் டாடப்படுகிறது. நவராத்திரியின்போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்ற இம்மூவரையும் பூஜிப்ப வர்களுக்கு எதிலும் நலம்பெறும் வகையில் வெற்றி கிடைக்கும்.



இராமாயணத்தில் சம்பவத்தில்...

அரக்கர் கூட்டம் தன்வாலில் இட்ட தீயினால் ராட்சகர்களின் மாளிகைகளையும், தோட்டங்களையும் எறித்தார். வீட்டுக்கு வீடு தாவினார், மந்திரி, சேனாதிபதியின் மாளிகை களெல்லாம் பற்றி எரிந்தன.

விபீஷணன் திருமாளிகையை மட்டும்எதுவும் செய்யாது தாண்டிப் போனார். தங்க நகைகளெல்லாம் உருகிக் குழம்பாய் ஓடின.

திரிகூட மலையில் நின்று இதைப்பார்த்தார் மாருதி.யானைக் கொட்டடி எரிந்ததால்யானைகள் பிளிறிய படி காட்டுக்குள்ஓடின. குதிரைகளின் கனைப்பு காதைக் செவிடாக்கியது. தேர் சட்டங்கள் மளார்மளாரென முறிந்தன.

ஸ்ரீராமரை, ஸ்மரித்தபடி இதனை பார்த்துக் கொண்டிருந்த மாருதி, பின்னர் சமுத்திர நீரில் வாலை நனைத்து தீயை அணைத்தார்.

“ஐயோ, குரங்குப் புத்தி என்பது சரியாயிற்றே, இதே இலங்கையில் ஸ்ரீசீதாதேவியும் இருக்கிறார் என்பதை மறந்து போனேனே, இனி பிரபுவிடம் சென்று சொல்ல என்ன இருக்கிறது?

அடியேன் சமுத்திரத்தை தாண்டியது வீண். சொன்னதைச் செய்யாமல் அதிகப்படி அடியேன் தவறு செய்து விட்டேன்.

அடியேனும் இந்த அக்னியில் விழுந்து மடியலாம் என்றால் அக்னி என்னைத் தகிக் காமல் குளிர்ந்திருந்ததே, சமுத்திரத்தில் விழுந்து திமிகலங்களின் பசி தீர்ப்போமா?

திரும்பிப் போனால் அங்கதனும், ஜாம்பவானும், சுக்ரீவனும் வெறுப்பு காட்டுவார்களே, மற்றவர்களின் கேலிகளுக்குள்ளாகி உயிரோடு இருக்கலாமா? செய்தி கேட்டால் ஸ்ரீராமர் உயிர் தரிப்பாரா? ஸ்ரீ ராமரை பின்தொடர்ந்து ஸ்ரீலக்ஷ்மணனும், பரதன், சத்ருக்கனன், அவர்களின் தாய்மார்கள், தேவியார். ஐயோ, அடியேனின் அவசர புத்தி இஷ்வாகு வம்சத்தையே அழித்து விடப் போகிறதா?”

இப்படி அனுமன் துக்கப்பட்ட போது அவருடைய வலது கண்ணும், தோளும், தொடையும் துடித்தன. அருகிலிருந்த பொய்கையில் சற்றே எழும்பிய அன்னம் சிறகடித்தது. எங்கிருந்தோ ஒரு பழம் வேகமாக அவரருகில் உருண்டது.

இந்த சுப சகுனங்கள் மாருதிக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தந்தன.

“நெருப்பை நெருப்பு எரிக்குமா?தெய்வ அனுகிரகத்தால் ஸ்ரீசீதா தேவி, பத்திரமாக இருப்பார், அக்னி அடியேனுக்கே குளிர்ந்த போது ஸ்ரீ ராம பத்னிக்கு குளிராதா? என்று நினைத்தார்.

அவ்வமையம் ஆகாயத்தில் சஞ்சரித்த சாரணர்கள்” இலங்கையில் ஒரு இடம் பாக்கி இல்லாமல் எரிகிறது. ஆனால் ஸ்ரீ சீதா தேவிக்கு மட்டும் ஆபத்தில்லையா” என்று பேசிக்கொண்டு போனார்கள்.

இதைக் கேட்டமாருதி மனம் குளிர்ந்தார். எதற்கும் ஸ்ரீசீதா தேவியை மறுபடி தரிசித்தே திரும்புவதென்று முடிவெடுத்தார்.

சிம்சுபா விருட்சத்தடியில் அமர்ந்திருக்கும் ஸ்ரீஜானகியை நமஸ்கரித்தார் அனுமார்.

“தாயே, தங்களுக்கு என்னாவாயிற்றோ என்று சற்று கலங்கி, அஞ்சினேன், தங்களை தரிசிப்பது அடியேனின் பாக்கியமே, அடியேன் புறப்பட உத்தரவு தர வேண்டும்” என்று நமஸ்கரித்தார்.

“ஆஞ்சனேயா, நீர் ஒருவரே சகல சத்துருக்களையும் அழிக்கக்கூடியவர் என்பதை நிரூபித்தாய், இதனால் என் தைரியம் அதிகரித்தது வெற்றியுடன் சென்றுவா!” என்றார் ஸ்ரீசீதா தேவி.

## அனைத்து தீமைகளையும் அழிக்கக் கூடியவர்



சார்புடைய தன்மையும்

# கடவுளும்



"ஒரு மரத்துக்கு அருகில் சென்று, அதனுடன் தனியாக பேசுங்கள் அதைத் தொட்டுத் தழுவிக்கொள்ளுங்கள்...

அதை உணர்வுடன் சந்தியுங்கள்....

அதன் அருகில் உட்கார்ந்து அந்த மரமும் உங்களை உணரச் செய்யுங்கள்

அது உங்களை...

"நீங்கள் மிகவும் நல்லவர் எந்தக் கெடுதலும் எண்ணாதவர்..!!!" என்று உணரட்டும்

கொஞ்சம் கொஞ்சமாக இந்த நட்பு அதிகரிக்க,

நீங்கள் எப்பொழுதெல்லாம் அதன் அருகில் வருகிறீர்களோ, அப்பொழுதெல்லாம் அதன் தன்மையில் ஒரு மாற்றம் ஏற்படுவதை உணர்வீர்கள்.

நீங்கள் தொடும்பொழுதெல்லாம் ஒரு குழந்தையைப்போல குதூகலம் அடையும்.

நீங்கள் அருகில் உட்கார்ந்திருக்கும் போதெல்லாம் அதன் சிநேகத் தன்மையை உணர்வீர்கள்

நீங்கள் துக்கமான மன நிலையில் அதன் அருகில் வரும் போதெல்லாம் துக்கம் மறைந்து போவதை உணர்வீர்கள்

அப்போதுதான் நீங்கள் ஒருவருக்கு ஒருவர் சார்ந்து இருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்

நீங்கள் அந்த மரத்தை மகிழ்ச்சி அடையச் செய்யலாம் அதுபோல, அந்த மரமும் உங்களை மகிழ்ச்சி அடையச் செய்யும் வாழ்க்கை முழுக்கவும் ஒருவரை ஒருவர் நேசித்து, சார்ந்து இருப்பதை உணர்வீர்கள் இந்த சார்புடைய தன்மையைத்தான் நான் கடவுள் தன்மை என்று அழைக்கிறேன்"

– ஓஷோ



# நவராத்திரியில் அம்மன் விரும்பும் அரிசி செம்மண் கோலமும்

சிவனுக்கான ஒரு ராத்திரி சிவராத்திரி. அன்னை பார்வதிக்கான ஒன்பது ராத்திரி நவராத்திரி. இந்த ஒன்பது நாட்களும் அன்னையை எந்த அம்சமாக கொண்டாடப்பட வேண்டும் என்பதைப் பற்றி நாம் தெரிந்துக்கொள்ளலாம்.

நவராத்திரி பூஜை மட்டும் ஏன் துர்கா, லட்சுமி, சரஸ்வதி என வணங்குகின்றனர் என்ற கேள்வி எழுவது இயல்பு. கலைமகளுக்குத்தானே முதல் பூஜை செய்யவேண்டும். ஏன் இங்கே அலைமகளுக்கு முதல் பூஜை என்ற கேள்வி நியாயப்படி எழுவது இயல்பு. சிருஷ்டி, வரிசைப்படி பார்த்தால் முறையே சரஸ்வதி, லட்சுமி, துர்கை என்றுதான் வரும். ஆனால் நவராத்திரியின்போது மட்டும் ஏன் இந்த முறை மாற்றமடைந்து, துர்கா, லட்சுமி, சரஸ்வதி என்று வணங்குகிறோம்.

துர்க்கையே முதல் மகளாக இருப்பதால், நவராத்திரியின் முதல் மூன்று நாட்களும் துர்க்கை இடம் பெற்று நம் துயர் துடைக்கிறாள். நவராத்திரியின்போது துர்க்கையை முதலில் பூஜிக்கிறோம் என்பதுதான் காரணம். ராத்திரிக்கு அதிதேவதை துர்க்கை. அகத்தையும், புறத்தையும் அழகுப்படுத்தித் தூய்மைப்படுத்துவதற்காக துர்க்கை முதலில் வருகிறாள்.

நவராத்திரி நாட்களில் பகலில் சிவ பூஜையும் இரவில் அம்பிகை பூஜையும் செய்வதே சரியான வழிபாடாகும். நவராத்திரி ஒன்பது நாட்களும் தினமும் பகலில் ஆயிரெத்தெட்டு சிவ நாமாவளிகளை ஜெபித்து வழிபாட்டால் அளவிடற்கரிய பலன்கள் கிடைக்கும். நவராத்திரி வழிபாட்டை தினமும் தொடங்கும் போது ஸ்யவன மகரிஷியையும் சுகன்யா தேவியையும் தியானித்தபடியே தினசரி பூஜையை தொடங்க வேண்டும்.

நவராத்திரி நாட்களில் வீட்டில் கோலமிடுவதற்கு சுண்ணாம்பு மாவை பயன்படுத்தக்கூடாது அரிசி மாவைப் பயன்படுத்திதான் கோலமிட வேண்டும். இவ்வாறு செய்வதால் குடும்ப ஒற்றுமையும், செல்வமும் வளரும். சுண்ணாம்பு மாவு பயன்படுத்தினாலோ, எதிர்மறையான விளைவுகளே உருவாகும் என்பது ஐதீகம். நவராத்திரி கோலத்தை செம்மண் கலந்து போட்டால் அம்பாள் மனமகிழ்ந்து வருவார்.






# ஆன்மிக உலகின்
# முதல் இலவச
# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த
## அனைத்து இதழ்களையும்
## கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)–ல்
படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு
முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி,
தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு,
போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# ஆன்மீக வழியில் அமைதி

சுதர்மம் என்றால் நமது கடமைகள் எதுவோ அந்தக் கடமைகளை மட்டும் செய்வது ஆகும். சுதர்மம் பற்றி நம் கடமைகளை செய்யும்போது நாளடைவில் நம் அனுபவங்களின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். நம்முடைய கடமையை மட்டும் நன்கு புரிந்து அதன்படி செயல்புரிய வேண்டும். அதாவது நாம் உலகில் காணும் தேவையற்ற விசயங்களில் இருந்து மனதை விலகியிருத்தல் வேண்டும். நமது வாழ்வில் நல்லவைகளை நேர்மறை எண்ணங்களை மனதில் எண்ணி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதேபோல் வாழ்வில் நல்லவைகளை படித்தும் கேட்டும் மகிழவேண்டும். நன்மை தரும் உயர்ந்த கருத்துக்களை, நாம் தவறாமல் மனதில் பதிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் கடைபிடிப்பதற்கு மனதில் வைராக்கியம் வேண்டும். வைராக்கியம் இருந்தால்தான் ஆன்மீக வழியில் முன்னேற்றம் காணலாம். ‘மனம் போன போக்கில் போக வேண்டாம்’ என்ற கருத்தை மனதில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். அதனால் மனிதன் சிந்தித்து சுயகட்டுப்பாட்டுகளுடன் உலகில் செயல்படுவதற்கு முடியும். அவ்வாறு மனிதன் செயல்படும்போது அவன் விரும்பும் தேடும் மனஅமைதி, அவனையும் அறியாமல் அவனிடம் வந்து சேர்ந்து விடும்.

மனித மனம் அடிக்கடி எதையாவது நினைத்துக்கொண்டு சஞ்சலப்பட்டுக் கொண்டே இருக்கும். அவ்வாறு மனம் சஞ் சலப்பட்டுக்கொண்டே இருக்கும்போது மனிதனுக்கு மன அமைதி என்பது கிடைப்பது அரிது. பொதுவாக மனிதர்களுடைய மனம் இருவகையில் சஞ்சலப்படலாம். ஒன்று நமது மனம் வெளியிலிருந்து வரும் விசயங்களின் மூலம் சஞ்சலம் அடைகிறது. மற்றொன்று ஏற்கனவே நம் மனதில் பதிந்து வைத்துள்ள வேண்டாத விசயங்கள் செயல்களினால் மனம் சஞ்சலம் அடைகிறது. எனவே மனதிலிருந்து வேண்டாத விசயங்கள் செயல்பாடுகளை அறிந்து அவைகளை மனதிலிருந்து முற்றிலும் அகற்ற வேண்டும். அவ்வாறு வேண்டாத விசயங்களை நீக்காமல் மனதில் மனச்சுமைகளை வைத்துக்கொண்டே இருந்தால் அவனையும் அறியாமல் மனம் துன்பங்களில் மூழ்கி அமைதியை இழந்து விடும்.

மேலும் மனிதன் தனது எதிர்கால வாழ்வை நினைத்து பயந்துகொண்டு மனம் துக்கத்தில் ஆழ்ந்து சஞ்சலப்படலாம். மனிதன் இந்திரியங்கள் வழியாகக் காணும் காட்சிகள் கேட்கும் கருத்துக்கள் மூலம் அவன் மனம் சஞ்சலபடலாம். அவ்வாறு நமது மனதை சஞ்சலப்படுத்தாமல் அமைதியாக இருப்பதற்கு ஆன்மீக வழியில் சென்று தீர்வு காணலாம். மனிதன் கண் காது நாக்கு, நாசி, மெய் போன்ற ஐம்புலன்களையும் உலக விசயங்களில் மிகவும் கவனமாகப் பயன்படுத்தவேண்டும் என்று ஆன்மீகம் வலியுறுத்தி கூறுகிறது. இதனை திருவள்ளுவர்

“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க,
நெறிநின்றார் நீடு வாழ்வார்”

என்ற குறள் மூலம் புலனடக்கத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுகிறார். இதனை வலியுறுத்தி புலனடக்கம் மன அடக்கம், இந்திரிய ஒழுக்கம் பற்றி வேதங்கள் சாஸ்திரங்கள் இதிகாசங்களும் கூறுகிறது.

விலகியிருத்தல் என்றால் உலகில் உள்ள தேவையற்ற விசயங்களில் இருந்து மனம் விலகி இருத்தல் என்று பொருள் கொள்ள வேண்டும். அதாவது நமது மனதிற்கு எதெல்லாம் துன்பம் சஞ்சலம் தரக்கூடியதாக இருக்குமோ அதனை அறிவுபூர்வமாக சிந்தித்து அனுபவபூர்மாக உணர்ந்து அதிலிருந்து மனம் விலகி இருக்க வேண்டும். ஆன்மீக வழியில் சென்று நாம் என்னென்ன சாதனைகளை செய்து புலனடக்கம், மனக்கட்டுப்பாடு போன்றவைகளை செய்து கொண்டிருந்தமோ, அத்தகைய சாதனைகளை விட்டுவிடாமல் தொடர்ந்து தவறாமல் கடைப்பிடித்து வரவேண்டும். அதாவது நமது இந்திரியங்களையும் மனதையும் கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்து கொண்டிருந்தமோ அதனை நாம் தொடர்ந்து தவறாமல் கடைபிடித்து வர வேண்டும்.

எடுத்தக்காட்டாக ஒரு மூன்று வயது குழந்தை தாய் ஊட்டும் உணவு உண்ணாமல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அந்தக் குழந்தையின் தாய் அக்குழந்தைக்கு உணவு கொடுக்க வேண்டுமென்றால் ஓடிய குழந்தையை முதலில் வெளியே சென்று பிடித்து வரவேண்டும். அதன்பின் மீண்டும் அக்குழந்தை தன்னை விட்டு ஓடிவிடாமல்

27

அதன் கையை இறுகிப்பிடித்து தாய் தன்னோட மடியில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த தாய் குழந்தைக்கு உணவை ஊட்டுவதற்கு முடியும்.

அதேபோல் நமது மனம், இந்திரியங்கள் மூலம் வெளியே பல வழிகளில் நம்மை இழுத்துச் சென்று கொண்டேயிருக்கும். அவ்வாறு இழுத்துச் செல்லும் மனதை, ஆன்மீகச் சாதனைகள் மூலம் மனதை நம் வசம் கொண்டு வருவதற்கு பொறுமையுடன் அப்போது முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதற்கு ஆன்மீக வழியில் இந்திரியக் கட்டுப்பாட்டுக்காக எத்தகைய சாதனைகளை எல்லாம் நாம் மேற்கொண்டமோ, அத்தகைய சாதனைகளைத் தவறாமல் தொடர்ந்து கடைபிடித்து வர வேண்டும். நமது இந்திரியங்கள் வழியாக வெளியே சென்ற நமது மனதை நம் வசம் கொண்டு வந்தால் மட்டும் போதுமானதாக இருக்காது.

தாய் ஊட்டும் உணவை உண்ணாமல் ஓடிக்கொண்டிருக்கும் குழந்தையை மீண்டும் ஓடி விடாமல் தாய் இறுகிப் பிடித்துக்கொண்டு இருப்பதுபோல், நமது மனதை நாமும் நம் வசம் வரப்பெற்ற மனதையும் இந்திரியங்கள் வழியாக மீண்டும் வெளியேறி விடாமல், அதாவது மனம் தவறான வழியில் சென்று விடாமல் கவனமாக பிடித்து வைத்துக்கொள்ளவேண்டும். அதற்கு ஆன்மீக வழியில் சென்று வைராக்கியத்துடன் நாம் வசப்படுத்திய நமது மனதை நம்மை விட்டு தவறான வழியில் சென்று விடாமல் இறுகப் பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும். நம் இந்திரியங்கள் வழியாக மனம் அதன் போக்கில் சென்று கொண்டிருந்தால் துன்பங்கள் துயரங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதனால் நமது மன அமைதியும் இழக்க வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவற்றை நாம் தவிர்ப்பதற்கு ஆன்மீக வழியில் சென்று நமது செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக நண்பகல் வெயிலின்போது சூட்டினைத் தாங்கிக்கொண்டு தார்ச்சாலையில் நாம் ஓடுவது சுலபம். ஆனால் அந்த உச்சிவெயில் சூட்டினைத் தாங்கிக்கொண்டு ஓடாமல் ஒரே இடத்தில் நாம் நிற்பதுதான் மிகவும் சிரமம். உச்சிவெயில் சூட்டினை தாங்கிக்கொண்டு தார்ச்சாலையில் நிற்க முடியாது ஆனால் அந்த இடத்தில் நிற்காமல் நிழல் இருக்கும் இடத்திற்கு ஓடி விடலாம். அதேபோல் தேவையற்ற விசயங்களில் நம் மனதை நிலை நிறுத்தாமல் துன்பப்படாமல் அதிலிருந்து தப்பித்து ஓடிவிட வேண்டும். அதாவது உலகில் காணப்படும் தேவையற்ற விசயங்களில் மனம் சென்று விடாமல் நாம் கவனமுடன் இருந்து கொள்ளலாம். ஆனால் பல சமயங்களில் நமது மனதை அவ்வாறு வெளியே சென்று விடாமல் இருப்பதற்கு மனதை எளிதில் கட்டுப்படுத்துவதற்கு முடிவதில்லை.



நாம் கண்கள் என்ற இந்திரியத்திடம் உலகில் காணும் நம் மனதை பாதிக்கக்கூடியவைகள் எதையும் பார்ப்பதில்லை. காதுகள் என்ற இந்திரியத்திடம் மனதை பாதிக்கக்கூடியவைகள் எதையும் கேட்பதில்லை. நாசி என்ற இந்திரியத்திடம் மனதை பாதிக்கக்கூடியவைகள் எதையும் நுகர்ந்து பார்ப்பதில்லை. வாய் என்ற இந்திரியத்திடம் மனதை பாதிக்கக் கூடியவைகள் எதையும் பேசுவதில்லை என்று மனிதன் சுய கட்டுப்பாடுகளுடன் மன உறுதியுடன் இருக்க வேண்டும். அவ்வாறு மன உறுதியுடன் இருப்பதற்கு ஆன்மீக வழியில் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

சிலர் ஆன்மீக வழியில் சென்று இந்திரியங்கள் வழியாக மனம் செல்வதற்கு விடாமல் தங்கள் மனதை ஓரளவுக்கு கட்டுப்படுத்தவும் செய்வார்கள். மேலும் அவர்கள் மனக்கட்டுப்பாடுகளை கடைபிடிக்கவும் செய்வார்கள். ஆனால் அவர்கள் அவற்றை அவ்வாறு தொடர்ந்து மன வைராக்கியத்துடன் கடைபிடிப்பதில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் நம்மிடம் வைராக்கியம், பொறுமை, மனஉறுதி சகிப்புத்தன்மை போன்றவைகள் இல்லாமைதான். அதனால் நாம் ஆன்மீகத்தில், நமது வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியாமல் மன அமைதியின்றி மிகவும் துன்பப்படுகிறோம்.

பொதுவாக மனதை எந்தெந்த பொருள்கள், செயல்கள் மூலம் நமது மனதுக்கு ஒருவிதமான மயக்கம், துன்பங்கள், தீமைகள், கோபம் போன்றவைகள் வருமோ அவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும். அவ்வாறு விலகுவதற்கு ஆன்மீக வழியில் சிந்தித்து செயல்புரிய வேண்டும். அதாவது நமது மனதையும் இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி தீமை

தரக்கூடிய எண்ணங்கள் செயல்கள் போன்றவை நம் மனதில் புகுந்து விடாமல் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நமது மனதையும் இந்திரியங்களையும் தீயவற்றிலிருந்து தீயசெயல்களிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மனிதன் இந்திரியங்களை அதன் போக்கில் போகவிடாமல் மனதை கட்டுப்படுத்தினாலே ஓரளவுக்கு மனதை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம். இதற்கு ஆன்மிகம் பல வழிமுறைகளைக் காட்டி பெரிதும் துணை புரிகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

இதற்கு ஒரு சிறந்த உபாயம் சந்நியாசம் கொள்ளுதல் வேண்டும். சந்நியாசம் என்று நினைத்தவுடன் நமக்கு ஒருவிதமான பயம் அச்சம்கூட தோன்றலாம். சந்நியாசம் கொண்டால்தான் மோட்சம் நல்ல பண்புகள் நமக்கு கிடைக்குமா? இல்லறத்தில் இருந்துகொண்டு மோட்சத்தை ஆன்மீகப் பண்புகளுடன் வாழமுடியாதா ? என்ற ஒரு சந்தேகம் கவலை நமது மனதில் எழுகிறது. இந்த இடத்தில் சந்நியாசம் என்றால் நமது முக்கியப்பொறுப்புகளை விடுதல் அல்லது பொறுப்புகளில் இருந்து விலகியிருத்தல் வேண்டும் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். குடும்பத்தில் இருந்துகொண்டே இல்லறஞானி போல் வாழ வேண்டும்.

அதாவது நம்முடைய பொறுப்புகளை மற்றவர்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்து விட வேண்டும். அவை அலுவலகப் பொறுப்புகளாகவோ அல்லது குடும்ப பொறுப்புகளாகவோகூட இருக்கலாம். பொறுப்பு என்றால் அதாவது நம் வீட்டுப் பீரோவின் சாவியை நம்மிடம் இருந்து நமது வீட்டில் இருக்கும் நம்பிக்கையானவரிடம் கொடுப்பதுபோன்று ஆகும். நமது பொறுப்புகளை நம்பிக்கையானவரிடம் கொடுத்துவிட்டு, அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்கு முழுச்சுதந்திரத்தையும் அப்போது கொடுத்து விடவேண்டும். சிலபேர் நம்பிக்கையுடன் பொறுப்புகளை ஒருவரிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். ஆனால் ஒப்படைத்ததற்கு பிறகு, நாம் நினைத்தபடி கூறியபடிதான் செயல்புரிய வேண்டும் என்று பொறுப்பை ஏற்றுக்கொண்டவரிடம் நாம் கட்டளையிடாமல் இருக்க வேண்டும்.

அதாவது பொறுப்புகளை ஏற்றுக்கொண்டவர் சுதந்திரமாக செயல்படுவதற்கு முழுச்சுதந்திரத்தினைக் கொடுத்து விடவேண்டும். நாம் பொறுப்பில்லாமல் இருப்பது என்பது உலக நடைமுறையில் வேறு அர்த்தம் ஆகும். அதாவது வீட்டைக் கவனிக்காமல் தன்னிச்சையாக சுற்றுவது, பொறுப்புகளை தட்டிக் கழிப்பது என்று உலகவழக்கில் கூறுவதாகும். இந்த இடத்தில் அதாவது ஆன்மீக வழியில் அப்படி அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நமக்குத் தேவையில்லாத பொறுப்பான பதவியில் இல்லாமல் இருத்தல் என்று பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நாம் தேடும் விரும்பும் மன அமைதி நமக்குக் கிடைக்கும்

சிலர் தங்களிடமிருந்த பொறுப்புகளை நம்பிக்கையானவரிடம் ஒப்படைத்து விட்டு, நமக்கு பாரம் குறைந்து விட்டது என்று நிம்மதியாக இருப்பதில்லை.

ஒருவர் பொறுப்புகளை ஒப்படைத்தபின் பொறுப்பை ஏற்றுக்கொண்டவரை அவர் கண்காணிப்பதால் யாருக்கு என்ன பயன் ஏற்படப்போகிறது? அதனால் அவருக்கு மனக்கஷ்டம் பணக்கஷ்டம் போன்ற துன்பங்கள்தான் ஏற்படும். ஒருவரிடம் பொறுப்புகளை ஒப்படைத்த பின்பு நமக்கு விடுதலை கிடைத்ததுபோல் உணர்ந்து நாம் முற்றிலும் அதிலிருந்து விலகி இருக்க வேண்டும். அவ்வாறு விலகி இருந்தால்தான் ஆன்மீக வழியில் நாம் விரும்பிய தேடிய மன அமைதி என்பது கிடைக்கும். அவ்வாறு விலகிவிடாமல் இருந்தால் நமக்கு மன அழுத்தம், துன்பங்கள், துயரங்கள் ஆன்மீக வழியில் செல்வதற்குத் தடைகள் போன்றவைகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். அதனால் நமது உடலும் உள்ளமும் அமைதியின்றி தவிக்க நேரிடும். நாம் தேவையில்லாத பொறுப்புகளில் இருந்து விலகி இருக்கும்போது நம்மையும் அறியாமல் நாம் தேடும் விரும்பும் மனம் அமைதி கிடைக்கிறது.

இப்படி தேவையில்லாத பொறுப்புகளிலிருந்து விலகி இருப்பதால் என்ன பலன் என்றால் நமக்கு போதியளவு சுதந்திரமாக செயல்புரிவதற்கு காலமும் நேரமும் கிடைக்கிறது. அதாவது தியானம், ஜபம், பஜனை பாராயணம் செய்வதற்கு, சத்சங்கம் போன்றவற்றில் கலந்து ஆன்மீக அன்பர்களைச் சந்திப்பதற்கு போதியளவு நேரம் காலம் கிடைக்கிறது. அதனால் ஆன்மீகத்தில் முன்னேற்றம்

அடைந்து அதன் மூலம் நாம் தேடும் விரும்பும் மனஅமைதி போன்றவற்றை பெறுவதற்கு முடியும். நமக்குத் தேவையற்ற முக்கியப் பொறுப்புகள், பதவிகளை நாம் எடுத்துக்கொண்டால் நமது எண்ணமும் செயலும் அதில்தான் இயல்பாக ஈடுபடும். அதனால் ஆன்மீகத்தில் போதியளவு காலம் நேரம் கிடைப்பதில்லை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்ளலாம்.

நமது பொறுப்புகளை மற்றவர்களிடம் கொடுத்து விட்டால் பொறுப்புகள் பற்றி எந்தவிதமான சிந்தனையும் இல்லாமல் ஆன்மீக வழியில் நமது மனமானது இடர்பாடுகளின்றி செல்வதற்கு முடியும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்ளலாம். பொறுப்பு இல்லாமல் இருப்பது வேறு, பொறுப்புகளில் இருந்து விலகி இருத்தல் என்பது வேறு ஆகும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். நமக்கு கிடைக்கும் முக்கிய பதவிகள் அதன் மூலம் கிடைக்கும் புகழ் போன்றவற்றிலிருந்து விலகி இருத்தல் என்பதாகும். நம்முடைய அவசியமான கடமைகளை மட்டும் செய்தல் வேண்டும். ஆனால் நாம் வாழ்வில் அவ்வாறு இல்லாமல் நமது கடமைகளுக்கு அப்பாற்பட்டுள்ள பொறுப்புகளில் மற்றவர்களின் கடமைகளில் தேவையில்லாமல் உலக விசயங்களில் ஆழ்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு ஈடுபடக்கூடாது என்று ஆன்மிகம் வலியுறுத்துகிறது.

சிலபேர் நம்மிடம் 'நீங்கள் ஏன் இதிலெல்லாம் தலையிடுகிறீர்கள், இதற்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்' என்று அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தபின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டவர்கள் நம்மிடம் கேட்பார்கள். அவ்வாறு அவர்கள் கேட்கும்படியாக இல்லாமல், நாம் பொறுப்புகளிருந்து முற்றிலும் விலகி இருக்க வேண்டும். நமது கடமையை மட்டும் செய்ய வேண்டும். மற்றவர்களின் கடமைகளில் அவர்களுடைய விசயங்களில் தலையிடாமல் இருக்க வேண்டும். அவ்வாறு நாம் செயல்படும்போது மனநிலையில் நமக்கு ஒரு சித்தசுத்தி மனத்தூய்மை மன அமைதி போன்றவற்றை நம்மையும் அறியாமல் கிடைக்கும்.

இதனை நமது அனுபவத்தின் மூலம் நன்கு புரிந்து கொள்ளலாம். நமக்குத் தேவையில்லாத சம்பந்தமேயில்லாத விசயங்களில் தலையிடாமல் இருந்து விலகியிருப்பதற்கு நமது மனதை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். சிலபேர் ஆர்வக்கோளாறுகளினால் மற்றவர்களின் பொறுப்புகளை கடமைகளை வலிய சென்று ஏற்றுக்கொண்டு அல்லது பொறுப்புகளை வலிய தாங்களே எடுத்துக்கொண்டு அவதிப்படுவார்கள். அதனால்தான் நம்முடைய கடமைகள் எதுவோ அதை மட்டும் சிந்தித்து செயல்புரிய வேண்டும் என்று வேதங்கள், புராணங்கள் இதிகாசங்கள் போன்றவை வலியுறுத்திக் கூறுகிறது. பொதுவாக மற்றவர்களின் கடமைகளில் தலையிடாமல் இருந்தாலே அது ஒரு நல்ல பண்பாகும். இதனை நம் மனதில் நன்கு பதிந்து வைத்துக்கொண்டு செயல்புரிய வேண்டும். இதில் நாம் மன உறுதியுடன் இருக்க வேண்டும்.

சிலபேர் ஏதாவது ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ளச் சொன்னால் எனக்கு அதற்கெல்லாம் நேரமே இல்லை என்று புலம்புவார்கள். அதற்கு நாம் காலையில் இருந்து இரவு படுக்கப்போகும்வரை நாம் செய்த செயல்களை பட்டியலிட்டுப் பார்த்தால் எவ்வளவு நேரத்தை வீணாக்கி இருக்கிறோம் என்பது தெரிய வரும். எடுத்தக்காட்டாக தண்ணீர் பிரச்சனையை எடுத்துக் கொள்வோம் தண்ணீர் இருக்கும்போது, எவ்வளவு தாராளமாக வீணாக தண்ணீரை மகிழ்ச்சியுடன் செலவழிக்கிறோம். தண்ணீர் தட்டுப்பாடு வரும்போதுதான் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தத் தோன்றுகிறது. தண்ணீர் தட்டுப்பாடு வரும்போதுதான் கடந்த காலத்தில் தண்ணீரை வீணாக்கி இருக்கிறோம் என்பதை உணர்கிறோம்.

சன்னியாசம் என்றால் பொறுப்புகளில் இருந்து விலகி இருத்தல் என்று அர்த்தம் ஆகும். பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு விலகி இருத்தல் வேண்டும். நமக்கு வாழ்வில் மனஅமைதி அடைவதற்கும் ஆன்மீகவழியில் தியானம், ஜபம், பாராயணம் போன்றவைகளைக் கடைபிடிப்பதற்கு நமக்கு போதிய காலம் தேவைப்படுகிறது. அதனால் நாம் தேவையற்ற பொறுப்புள்ள பதவிகளில் இருந்து விலகி இருக்க வேண்டும். மன அமைதி வேண்டுமென்றால் நம் தேவையற்ற பதவி மற்றும் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பதற்கு தயக்கம் கொள்ளக்கூடாது.



அவ்வாறு நாம் பொறுப்புகளை


மற்றவர்களிடம் ஒப்படைத்தபின் அதன்பேரில் எந்தவித எண்ணமும் கவலையும் இல்லாமல் சுதந்திரமாக இருக்க வேண்டும்.

அதாவது நாம் ஒப்படைத்த பொறுப்புகளை எப்படி அவன் செய்கிறான் தான் விரும்பியபடி செய்யவில்லை என்றால் அவனுக்கு விளக்கி அதற்கான கட்டளையிடுவது, அவன் அறியாமல் அவன் செயல்பாடுகளைக் கவனித்துக் கொண்டு இருத்தல் போன்ற செயல்பாடுகளை விடுவதற்கு தயாராக இருக்க வேண்டும். அப்படி விலகி இருந்து உன்னுடைய கடமை எதுவோ அதனை மட்டும் செய்தல் வேண்டும். இதனைத்தான் சந்நியாசம் என்று வேதங்கள் இதிகாசங்கள் கூறுகிறது. காலத்தின் பெருமை அறிந்து ஆன்மீக வழியில் பயனுள்ளதாகக் கழிக்க வேண்டும்.

சுதர்மத்தை மட்டும் செய்தல், தன்னோட கடமைகளை மட்டும் செய்தல், தேவையற்ற விசயங்களில் ஈடுபடாமல் விலகி இருத்தல் போன்றவற்றில் கவனமாக இருக்க வேண்டும். நாம் ஆன்மீகச் சாதனைகள் மூலம் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி, மனதை ஓரளவு அமைதிப்படுத்தி விட்டோம் என்று தவறாக தனக்குத்தானே எண்ணிக்கொண்டு, தொடர்ந்து ஆன்மீக சாதனைகள் செய்வதை மட்டும் விட்டுவிடக்கூடாது. மனதில் நல்ல சிந்தனைகள் செயல்பாடுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். மன அமைதியை எப்படி தொடர்வது என்று இடைவிடாமல் ஆன்மீக வழியில் சிந்தித்து அதன்படி செயல்புரிவதற்கு மனதை பக்குவபடுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

நம் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி தகுந்த குருவின்மூலம் சாதனைகளை தவறாமல் செய்தால் மட்டும் நாம் தேடும் விரும்பும் மன அமைதியை அடைய முடியும். அவ்வாறு ஐம்புலன்களை கட்டுப்படுத்துவதற்கு புராணங்கள் இதிகாசங்கள் போன்றவை ஆன்மீக வழியில் எளிய வழிமுறைகளை காட்டுகின்றன. ஆன்மீக சாதனைகள் செய்வதில் மனமகிழ்ச்சியோடு முழுமையாக அதில் ஈடுபடுவதற்கு வேண்டும். நமது மனம் அலைபாயாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும். அதற்கு வழிமுறை என்ன என்று சிந்தித்துப் பார்த்தால், நாம் இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறோம் என்பதில் மட்டும் மனம் இருக்க வேண்டும். அதாவது மனதை நிகழ்காலத்தில் கவனம் வைத்துக்கொண்டு இருந்தாலே மனம் வேறு எங்கும் செல்வதில்லை. இதனை அனுபவத்தின் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

சிலர் புத்தகம் படித்துக் படித்துக்கொண்டிருக்கும்போது நமது குரங்கு மனம் வேறு எதையாவது நினைத்துக் கொண்டிருக்கும். இதனைத்தான் ஆன்மிகம் நிகழ்காலத்தில் மனம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. நமது மனம் நிகழ்காலத்தில் இருக்கும்போது வேறு எதனைப் பற்றியும் நினைப்பதில்லை. புத்தகம் படித்துக்கொண்டிருந்தால் கவனம் முழுதும் புத்தகம் படிப்பதில் இருக்க வேண்டும். அவ்வாறு படிக்கும்போது படிப்பதில் மட்டும் கவனம் இல்லாமல் இருந்தால் படிப்பதால் நாம் எவ்விதப்பயனும் பெறமுடியாது. புத்தகத்தினை படிப்பதில் மட்டும் மனம் இருக்க வேண்டும். அவ்வாறு கவனம் இருந்தால்தான் புத்தகத்தில் உள்ள கருத்துக்கள் நம் மனதில் பதியும். நாம் எந்த ஒரு செயல் செய்தாலும் நமது மனமும் செயலும் இணைந்து செயல்புரிய வேண்டும். அவ்வாறு செயல்புரியும்போது நாம் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.



**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

மொபைலில் ஆன்மிகமலரை முழுவதும் படிக்க

Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து




நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை

இதழ் முழுவதும் இலவசமாக படிக்கலாம்...